# தக்லீது (இமாம்களை) பின் தொடருதல்

**உருதுவில்: மௌலானா மௌலவி அல்லாமா முப்தி அஹ்மது யார்கான் ரஹிமஹுல்லாஹ்**

**தமிழில்: மௌலானா மௌலவி S.M.H. முஹம்மது அலி ஸைபுத்தீன் ரஹ்மானி பாகவி ஸூபி,**

**பதிப்புரை**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு துவக்கம், அனைத்து புகழும் அவனுக்கே உரித்தாகுக.

கருணையும், ஈடேற்றும், ஈருலக இரட்சகர். காருண்ய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கட்கும், அவாகள் தம் கிளைஞர்கள், தோழர்கள், இறையன்பர்கள், மெய்விசுவாசிகள் அனைவர்களின் பேரில் உண்டாவதாக!

வாழையடி வாழையாக பெரும் அரும் ஞானிகள், அறிஞர்கள், முக்தி பெற்ற பக்திமான்கள், இறை நேசர்களான குத்புமார்கள், அவ்லியாக்கள் போன்றோர்களால் போற்றப்பட்டு, கண்ணியப்படுத்தி பின்பற்றபட்ட தக்லீதை- இமாம்களை- பின்தொடருதலை,

இன்று நம் சன்மார்க்கத்தில் புதிதாக முளைத்த சில காளான்கள், இதை இழித்தும், பழித்தும், பேசியும், எழுதியும், தன் நிலைக் குலைந்து, திக்கு முக்காடி, தான் தோன்றித்தனமாக நடந்தும், வாயில் வந்ததெல்லாம் உளறிக் கொட்டியும் கெட்டு, பிறரையும் வழிகெடுத்து அற்ப சுகத்தை அனுபவித்து வரும் இக்காலக்கட்டத்தில்,

நம் இஸ்லாமிய மக்களை இம் மதிகேடர்களின் வழிகேட்டை விட்டும் காப்பாற்ற, நேர்மையான சீரிய வழியான நான்கு மத்ஹபுகளில் ஒன்றை தக்லீது பின் தொடர்ந்ததாக வேண்டுமென்பதையும் தக்லீதுவின் பொருள் என்ன? அதன் வகை என்ன? தக்லீது செய்வது எதில் கடமை? எதில் தடை? தக்லீது செய்யப்படும் முஜ்தஹிதுகளான இமாம்களின் தகுதிகள் என்ன? என்பதையெல்லாம் ஆணித்தரமாக யுக்தி, சுருதிப் பிராணங்களால் மிகத் தௌ;ளத் தெளிவாக பல உதாரணங்களை மேற்கோள்கள் காட்டி விளக்கியும் தொடுக்கப்படுகின்ற ஆட்சேபனைகளுக்கு தக்க பதில்களை கூறியும்,

சங்கைக்குரிய அல்லாமா முப்தி அஹ்மது யார்கான் நயீமி பதாயுனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வரைந்துள்ள 'ஜாஅல்ஹக்- சத்தியம் வந்துவிட்டது' என்ற உர்து நூலின் இப்பகுதியை,

கண்ணியத்திற்குரிய மௌலானா மௌலவி ஏ.ஆ.ர். முஹம்மது அலி சைபுத்தீன் ஆலிம் ஸூபி ரஹ்மானி பாகவி கலீபத்துல் காத்திரிய்யா மஹரத்துல் காத்திரிய்யா பேராசிரியர் அவர்கள் அழகுத் தமிழில் மொழிபெயர்த்து,

ஹிஜ்ரி- 1397 முஹ்ர்ரம் 1977 ஜனவரி மாதம் நமது சபையிரனால் வெளியிடப்பட்ட இந்நூலை இப்போது நம் இஸ்லாமிய மக்களுக்கு அவசியமும், அவசரமுமாக இருப்பதை கருத்தில் கொண்டு, பயன்பெற்று, நேர்வழி நடந்து, நம் சான்றோர்கள் பெற்றது போல் இம்மை மறுமை நற்பேறுகளை நாமும் பெற்றறுய்ய வேண்டுமென்ற நன்நோக்கம் கொண்டும், கண்ணியத்திற்குரிய மொழி பெயர்ப்பு ஆசிரியர் அனுமதி பெற்று மறுபதிப்பு செய்து வெளியிடுகின்றோம்.

வல்லமைமிகு அல்லாஹ் நம் அனைவர்களுக்கும் ஈருலகிலும் எல்லாவித ரஹ்மத்தும் பறக்கத்தும் செய்தருள்வானாக ஆமின்.

இவன்

**ஹிஸ்புல்லாஹ் சபையினர், ஸூபி மஸ்ஸில்**

காயல்பட்டினம்.

முதல் பதிப்பு :-1397- முஹர்ரம் 1977ஜனவரி

இரண்டாம் பதிப்பு :-1412 ரபீவுல் ஆஹிர்1991 அக்டோபர்

**தக்லீது (இமாம்களை)பின் தொடருதல்.**

தக்லீது பற்றி கூறும் போது ஐந்து காரியங்களை மனதில் வைத்துக் கொள்வது முக்கியம்.

1. தக்லீதுவின் பொருளும், அதன் வகைகளும்.
2. தக்லீது செய்வது எதில் கடமை? எதில் தடை?
3. தக்லீது எவர் மீது செய்வது? எவர் மீது செய்யலாகாது?
4. தக்லீது கடமை என்பது பற்றிய ஆதாராங்கள்.
5. தக்லீதுவின் மீது குறுக்கு விசாரணைகளும், அதற்கான தக்க பதில்களும்.

**'தக்லீது' வின் பொருள்:**

தக்லீதுக்கு இரு பொருட்கள் உண்டு. ஒன்று லுகவி- அகராதிப் பொருள். மற்றொன்று ஷரயீ- மார்க்க பரிபாஷைப் பொருள்.

கழுத்தில் பட்டி, மாலை போன்றவற்றை அணிவித்தல் என்பது அகராதிப் பொருள்.

மார்க்க சட்ட நுட்பங்களை அலசிபார்ப்வராக ஒருவர் இருப்பதினால் மற்றொருவர் தனக்கு அவருடைய சொல், செயல்களை மார்க்க கட்டளையாக கருதி அவரின் சொல் செயல்களை தனக்கு ஆதாரமாக எடுத்து கொண்டு பின் தொடர்ந்து நடக்குதல் என்பது ஷரயீ பொருளாகும்.

ஷரீஅத் ஆதாரங்களை தேடித் திரிவதின்றி நம் இமாம்களின் சொல் செயல்களை ஷரீஅத் ஆதாரமாக எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்து நடப்பது போன்றாகும்.

'ஒருவர் மற்றவரை அவர் மார்க்கத்தை உண்மையாக அறிந்தவர், ஆதாரங்களை அலசி ஆய்ந்தவர் என்ற நம்பிக்கையில், எவ்வித ஆதாரங்களையும் சிந்திக்காமல் அவரின் சொல், செயலில் பின்பற்றி நடப்பது

தக்லீது என்பதாகும்' என்று 'ஷரஹு முக்தஸருள் மனார்.' எனும் கிரந்தில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டு ஹாஷியா ஹுஸாமீ பக்கம் 86ல் காணப்படுகிறது. இந்த வாசகமே 'நூருல் அன்வார்' எனும் நூலிலும் தக்லீது விஷயமாக கூறுமிடத்தில் இருக்கிறது.

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது நூல் 'கிதாபுல் முஸ்தஸ்பா' 2வது வால்யூம் 387வது பக்கத்தில் கூறுகின்றார்கள்:- 'ஆதாரமின்றி அடுத்தவரின் சொல்லை பின்பற்றுதல் தக்லீதுவாகும்.'

ஆதாரமின்றி அதுத்தவரின் சொல்கொண்டு செயல்படுவது தக்லீதாகும்' (நூல்:- முஸல்ல முத்துபூத்)

மேற்கூறப்பட்ட பொருள்களினால் கீழ்காணும் கருத்துக்கள் விளங்க வருகின்றன:-

நபிகள் திலகம் அண்ணல் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கட்கு வழிப்பட்டு நடப்பதை தக்லீது செய்வது என்று சொல்வதில்லை. ஏன்? அவர்களின் சொல், செயல் அனைத்தும் ஷரீஅத் ஆதாரங்களாக இருக்கின்றனவே, தக்லீது என்று சொல்வதற்கு ஆதாரங்களை பார்க்கக் கூடாது என்றாகி விட்டதுவே.

எனவே நாம் நம்மை பெருமானாருக்கு வழிபட்டு நடக்கும் உம்மத்தினர்கள் என்று சொல்லிக் கொள்வோம். தக்லீது செய்த முகல்லிதுகள் என்று சொல்ல மாட்டோம்.

இது போன்று தான் ஷஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும், இமாம்கள் ரஹிமஹுமுல்லாஹ் அத்துனை பேர்களும் நாயகத் திருமேனி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினர்கள், முகல்லிதுகள் அல்லர்.

இது போன்று பொது ஜனங்கள், மார்க்க அறிஞர்களான உலமாக்களை பின்பற்றி நடப்பதினால் அவர்களை தக்லீது செய்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் பொது ஜனங்களில் ஒருவரும் உலமாக்களின் சொல் செயல்களை ஷரயீ ஆதாரமாக எடுத்துக் கொள்ளமாட்டார் என்றாலும் இந்த ஆலிம்கள் நம் இமாம்களின் சட்டதிட்ட நூற்களை நன்கு அறிந்தவர்கள், அவர்களின் நூற்களைப் பார்த்து தீர்ப்பு வழங்குகிறார்கள் என்று தான் பொது ஜனங்கள் விளங்குகிறார்கள்.

இந்த ஆலிம்களின் தீர்ப்புகள், இமாம்களின் தீர்ப்புகள் இமாம்களின் சொல் செயல்களுக்கு மாற்றமாக காணப்படின் ஆலிம்களின் தீர்ப்புகளை வீசி விடுகின்றனர். இந்த

தீர்ப்பு ஆலிம் ஸாஹிபுவின் சுய கருத்து இதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று இமாம்களின் சொல் செயல்களைத் தான், அவைகள் குர்ஆன் ஹதீதுகளை பார்த்து சொன்னாலும் சரிதான் அல்லது தங்களது கியாஸ் - அறிவால் ஆராய்ந்து ஒழுங்குப்படுத்தி சொன்னாலும் சரிதான் ஏற்றுக் கொள்கின்றனர்.

எனவே பொது ஜனங்கள் அனைவரும் இமாம்களை தான் தக்லீது செய்தார்ககள். ஆலிம்களை தக்லீது செய்தவர்கள் அல்லர்.

இந்த வித்தியாசத்தை மிக முக்கியமான மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**தக்லீதுவின் வகைகள்**

தக்லீது ஷரயீ, தக்லீது கைறு ஷரயீ என்று இருவகைப்படும். ஷரீஅத் சட்டங்களில் ஒருவரை (இமாமை) பின் தொடர்வதற்கு தக்லீது ஷரயீ என்று சொல்லப்படும்.

தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்றவற்றின் மஸ்அல்லாக்களில் இமாம்களுக்கு கட்டுப்பட்டு பின் தொடர்ந்து நடப்பது போலாகும்.

உலகியலில் ஒருவரை பின் தொடர்ந்து நடப்பதற்கு தக்லீது கைறு ஷரயீ என்று சொல்லப்படும்.

மருத்துவர்கள், மருத்துவ துறையில் அபூ அலி ஸீனாவையும், கவிஞர்கள், கவிஞர் திலகங்களான தாக், அமீர், மிர்ஸாகாலிப் போன்றவர்களையும் அராபிய இலக்கண இயல் நஹ்வு, சர்புகளில் ஸீபவைஹி இமாம், கலீல் இமாம்களையும், இவை போன்றே ஒவ்வொரு தொழிலாளிகளாகும் அவர் தம் தொழில் விற்பன்னர்களை தொடர்வதைப் போலாகும். இவை அனைத்தும் உலகியல் தக்லீதுகளாகும்.

கண்ணிய மிக்க சூபியாக்கள் சில நடைமுறைகளில், வழீபாக்களில் தங்களது குருநாதர்களின் சொல், செயல்களை பின் தொடர்கின்றனர். இது தீனிய்யான, தரீகத் அடிப்படையான தக்லீதுவாகும். ஷரயீ தக்லீதுவான ஹலால் ஹராமான மஸ்அலாக்களின் அடிப்படையான தக்லீதுவாகாது.

தக்லீது கைறு ஷரயீ, ஷரீஅத்திற்கு முரணானதாக இருப்பின் பின் தொடருதல் ஹராமாகும், ஷரீஅத்திற்கு முரண்பாடில்லையானால் ஜாயிஸ் - ஆகுமானதாகும்.

பண்டைகால கிழவிகள், தங்கள் மூதாதையர்களால் உண்டாக்கப்பட்ட இன்ப, துன்ப சடங்கு, ஆசாரங்களை மிகப் பேணுதலுடன் கடைப்பிடித்திருப்பதை நாம் காணலாம். அவைகள் ஷரீஅத்திற்கு மாறுபட்டதாக இருப்பின் அவைகளைப் பின் தொடந்து நடப்பது ஹராமாகும். இல்லையெனின் குற்றமில்லை.

ஷரீஅத்திற்கு முரணான மூதாதையர்களின் சடங்கு ஆசாரங்களை பின்பற்றுவது ஹராம் -ஆகாத காரியம் என்பது குறித்து தான் குர்ஆன் ஷரீபில் பல இடங்களில் அல்லாஹ் சுட்டிக் காட்டியுள்ளான்.

அவைகளில் சில:

*வலாது தி:மன் அ:பல்னா கல்பஹு* ...................

எவருடைய ஹிருதயத்தை நாம் நமது நினைப்பை விட்டு மறக்கடித்திருக்கின்றோம். அவன் மனம் போன போக்கை பின் பற்றினான். அவன் காரியம் எல்லையை விட்டு கடந்திருக்கிறதோ அத்தகையவனை பின்பற்றாதீர்' (18-27)

*வஇன்ஜாகதாக – அலா அன்துஷ்ரிக்கபீ*..................

'உனக்கு எதுபற்றி அறிவு இல்லையோ அதை எனக்கு இணைவைக்க (உனது தாய் தந்தையர்களான) அவ்விருவரும் உன்னோடு போர் தொடுத்தாலும் அவ்விருவருக்கும் வழிப்படாதீர்' (31-15)

*வஇதா – கீல – லஹும் - தஆலவ்*.....................

'அல்லாஹ் இறக்கிய (வேதத்தின்) அளவிலும், இவன் தூதரளவிலும் வாருங்கள், என்று (காபிர்களான) அவர்களிடம் கூறப்பட்டால்,

நாங்கள் எங்கள் மூதாதையர்களை எதன் மீது பெற்றுக் கொண்டோமோ அதுவே எங்களுக்குப் போதும் என்று சொல்வார்கள். அவர்களின் மூதாதையர்கள் எதைப் பற்றியும் அறியாதவர்களாக இருந்தாலும் சரியே' (5-104)

*வ-இதா-கீல-லஹு முத்த பிஊ-மா அன்ஸல்லாஹு*..............................

அல்லாஹ் இறக்கிய (வேதத்) தை பின்பற்றுங்கள் என்று அவர்கட்கு சொல்லப்பட்டால், இல்லை! எங்கள் மூதாதயர்களை எதன் மீது பெற்றோமோ அதையே நாங்கள் பின்பற்றுவோம் என சொல்வார்கள்.(2-170)

இவை இதைப் போன்றே திருக்குர்ஆன் வசனங்களில் எல்லாம் ஷரீ அத்திற்கு மாறுபாடான, முரணான, மடையர்களான, மூதாதையர்களால் உண்டாக்கப்பட்ட ஹராமான மூடசடங்கு ஆதாரங்களைத் தான் பின்பற்றி தொடரலாகாது என்று கண்டிக்கப்பட்டுள்ளது.

ஷரீஅத்திற்கு முரண்பாடில்லாத முன்னோர்களான நல்லவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சடங்கு ஆசாரங்களையும், இமாம்களையும் பின் தொடர்வது பற்றி அன்று! அன்று!!

இதற்கும் மேற்கண்ட திருவசனங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

மேற்கண்ட ஆயத்துக்கள் போன்றவற்றை மேற்கோள்காட்டி இமாம்களை தக்லீது செய்வதும், நல்லோர்களான சான்றோர்களின் அடிச்சுவடுகளை, ஆசாரங்களை பின்பற்றுவதும் 'ஹராம், ஷிர்கு' என்று புலம்பி வலம் வரும் கும்பல் நம்மை ஏமாற்றிவிடாமல் இருந்திட மிக உஷாராக இருக்க வேண்டும்.

**தக்லீது செய்வது எதில் கடமை? எதில் தடை?**

துக்லீது ஷரயீயில் சில விபரங்கள் உள்ளன. ஷரயீ மஸ்அலாக்கள் சட்ட திட்டங்கள் மூன்று விதங்களாக இருக்கின்றன.

1. அகாயிதுகள் - கொள்கை கோட்பாடுகள்

2. இமாம்களின் இஜ்திஹாதுக்கு – ஆராய்தலுக்கு இடமில்லாமல் பரிசுத்த குர்ஆனிலும், ஹதீது ஷரீபிலும், தௌ;ளத் தெளிவாக வந்துள்ள மஸ்அலாக்கள்.

3. திருக்குர்ஆன், ஹதீது ஷரீபுகளில் இருந்து இமாம்களால் இஜ்திகாது – ஆராய்ந்து கிரகித்தெடுக்கப்படும் மஸ்அலாக்கள்.

**முதல் விதமான** அகாயிது – கொள்கை கோட்பாடுகளில் எவரையும் பின் தொடருதல் கூடாது.

'ஆதாரம் (தேடுவது) இன்றி அடுத்தவரின் சொல் செயலை ஏற்றுக் கொள்வதுவே தக்லீதுவாகும். இந்த தக்லீது, புறூயியான அமலிய்யாவான – சன்மார்க்க கிரிகை, அனுஷ்டமானங்களில் ஆகுமானதாகும்.

'உஸூலுத்தீன் ஆன கொள்கைகளில் ஆகுமானதாகாது. இவைகளின் ஆதாரங்களை ஆராய்ந்து நிர்ணயம் கொள்வது அவசியமாகும்'. (தப்ஸீர் ரூஹுல் பயான்)

ஏகத்தவத்தையும், நபித்துவத்தையும் நம்பியிருக்கின்றீகளே எப்படி நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள் என்று நம்மிடம் எவராவது வினவினால்,

இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் (அல்லது இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்கள்) இப்படி சொன்னார்கள் என்றோ அல்லது பிக்ஹுல் அக்பர் போன்ற கொள்கை விளக்க நூற்களில் வந்திருப்பதினால் என்றோ சொல்ல மாட்டோம்.

எனினும் ஏகத்துவத்தின் ஆதாரங்களையும், நபித்துவத்தின் அத்தாட்சிகளையும் ஆராய்ந்து நிர்ணயம் கொண்டிருக்கிறோம் என்று தான் நாம் சொல்ல வேண்டும்.

ஏனெனில் அகாயிது கொள்கைகள் நிர்ணயம் கொள்வதில் பிறரை தக்லீது செய்வது ஆகாத காரியமாயிற்றே.

'மார்க்க அனுஷ்டானமான கிரிகைகளை தவிர்த்து மற்ற கொள்கை விஷயங்களில் பிறரை தக்லீது செய்யாது (அவரவர் தம் ஆதாரங்களைத் தேடி) நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு வயது வந்த சுவாதீனமானவர்கள் மீது கடமையாகும். இதுவே அஹ்லுஸ்

ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் கோட்பாடு. இவர்களே தான் அஷாயிராக்கள், மாத்துரீதிய்யாக்கள் என சொல்லப்படுவார்கள்;' (துர்ருல் முக்தார்)

'உம்மிடம் முஷ்ரிகீன்களில் நின்றும் எவரும் அபயம் தேடினால் அல்லாஹ்வின் திருவாக்கியங்களை (குர்ஆன்) கேட்குமளவு அபயம் அளிப்பீராக! பின் (பு அவர் ஈமான் கொள்ளவிடின்) அவரை அபயமான இடத்திற்கு (அவர் நாட்டிற்கு) அனுப்பி வைப்பீராக! (அல்குர்ஆன் 6-9)

(ஈமான் கொள்வதற்கு) தக்லீது செய்வது மட்டும் போதாது. ஆதாரம் தேடி சிந்தினை செய்து நிர்ணயம் கொள்வது அவசியம் என்பதையே மேற்கண்ட திரக்குர்ஆன் வசனம் அறிவிக்கின்றது' (தப்ஸீர் கபீர்)

(குர்ஆனிலும், ஹதீதுகளிலும்) தெளிவாக வந்துள்ள சட்டங்களில் எவரையும் தக்லீது செயவதும் பின் தொடருதலும் கூடாது.

ஐந்நேரத்தொழுகை , அதன் ரக்அத்தின் எண்ணிக்கை, ரமழான் நோன்பு, அதில் உண்ணுவதும் , குடிப்பதும் ஹராம் என்பன போன்ற மஸ்அலாக்கள் தௌ;ளத் தெளிவாக வந்துள்ளன. இவைகளை இமாம் அபுஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொன்னார்கள். அல்லது பிக்ஹுல் அக்பர் நூலில் வந்துள்ளன, ஆகையால் இவைகளை நம்புகின்றோம் என்று சொல்லலாகாது. இவை போன்ற தௌ;ள தெளிவாக வந்தவற்றில் தக்லீது செய்வது கூடாது. குர் ஆன், ஹதீதுகளில் தெளிவாக வராத மஸ்அலாக்களில், குர் ஆன், ஹதீது, இஜ்மாவுல் உம்மத்- நாயகத்திருமேனி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினர்கள் ஏகோபித்து முடிவு செய்தவைகளை அடிப்படையாக வைத்து ஜெய சீலர்களான இமாம்களால் இஜ்திஹாத் செய்யப்பட்டு இயற்றப்படும் மஸ்அலாக்களில் தக்லீது செய்வது மக்கட்கு மார்க்கத்தில் இன்றிமையாத கடைமையகும்.

ஒரு இமாம் மற்றொரு இமாமை தக்லீது செய்வது அவசியமில்லை. (அவர் தனக்கே இஜ்திஹாது செய்வதற்குரிய ஆற்றல் இருக்க மற்றொருவரை தக்லீது செய்வது எப்படி? ஆனால் மற்ற ஜனங்களுக்கு அத் தகுதி இல்லையாதலால் அவர்கள், நான்கு இம்மாகளில் ஒருவரை பின்பற்றியாக வேண்டியது அவசியமாகிவிட்டது.

தக்லீது செய்வது எதில் கடமை? ஏதில் தடை? எதில் ஆகுமானது? என்பனவற்றை மனதில் ஆழமாக பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் ஙைறு முகல்லிதுகள்- இமாம்களை பின் தொடராத மூதேவிகள் நம்மிடம், நீங்கள் குர் ஆன், ஹதீது ஆதாரங்கள் வைத்து மஸ்அலாக்கள் எடுப்பதில்லையே, இமாம்களைத்தானே பின் தொடருகிறீர்கள்? அப்படியானால் தொழுகை சம்பந்தமாக குர் ஆன் ஆயத்துக்களையும், ஹதீதுகளையும் மேற்கோள்காட்டுகிறீர்கள் ஏன்? என சில சமயம் குருட்டு கேள்வியை தொடுத்து விடலாம்.

அவர்கள் கேள்வியிலேயே பதிலும் அமைந்திருக்கிறது. அவர்கட்கு தென்படவில்லை போலும்.

தொழுகை கடமை என்பதில் எந்த இமாமையும் நாங்கள் தக்லீது பின் தொடரவில்லையே! இவ்வகை தக்லீது எங்களிடம் கூடாது தான்.

நாங்கள் தொழுகையில் உட்பிரிவில் தான் இமாம்களை பின் தொடர்கின்றோம் தவிர அது (அந்த தொழுகை) முஃமின்கள் மீது கடமை என்பதில் அல்ல.

ஆயத்துக்களையும், ஹதீதுகளையும் மேற் கோள் காட்டுவது, எங்கள் இமாம்களின் வழி முறைகள் சரியானவைத்தான் என்பதற்கு உறுதுணையாக அமைந்திடவே தான். எங்களின் தக்லீக்கு அல்ல. ஏன் எங்களின் தக்லீது அவைகளை கூறுவதற்கு முன்பே நிச்சயமாகி விட்டதுவே!

இமாம்களை தக்லீது செய்த முகல்லிதுகள் எவ்வித குர் ஆன் ஹதீது ஆதாரங்களையும் கண்ணெடுத்துக் கூட பார்க்கலாகாது என்ற கருத்திலன்று. எத்துணை ஆதாரங்களையும் பார்க்கலாம், எனினும் அவைகளில் தனது சுய புத்தியை செலுத்திடாமல் ஓர் இமாமை பின் தொடரந்தவனுக்காகவே இருந்திடல் வேண்டும் என்பதே!

இவை போன்ற சன்மார்க்க திட்டங்களுக்கு சம்பந்தமில்லாத வரலாறுகளிலும் எவரையும் பின் தொடரவேண்டியதில்லை. உதாரணமாக:

'**யஸீது**' என்பார் காபிரா? இல்லையா? என்பது வரலாறு அடிப்படையானது (இது ஈமான் காரியத்தை சேர்ந்ததன்று, இதில் 'யஸீது' காபிர் என்று சொல்கின்றவர்களையோ பின்பற்றியாக வேண்டியதில்லை.

ஆகவே தக்லீதுவின் வகைகள், கடமைகள், தடைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

பருவமடைந்து சுவாதீனமான முஸ்லிம்கள், 'முஜ்தஹிதுகள்' என்றும், 'ஙைறு முஜ்தஹிதுகள் என்றும் இரு வகுப்பினராவார்கள்.

**முஜ்ஹிதுகள் என்பவர்கள்:-**

குர் ஆன் ஷரீபின் சாடை சயக்கினைகளையும, அதன் அகக் கருத்துக்களையும் நன்கு விளங்கி மஸ் அலாக்கள் அமைத்திடும் அளவிற்கு தகுதியுள்ளவராகும்.

நாஸிக், மன்ஸீக் -விதியை மாற்றும் வசனங்கள், விதி மாற்றம் பெறும் வசனங்கள் அத்தணையையும் அறிந்தவராகவும்,

நஹ்வு, ஸர்பு, பலாத் போன்ற இலக்கண இலக்கிய கலைகளைகளிலும் நடைமுறை வழக்கங்களிலும், விற்பன்னராகவும்,

சட்டத்திட்ட வரம்புகளை ஏற்படுத்திடும் அமுத வாக்குகள் அனைத்திலும் கண்ணோட்டத்தை நன்கு செலுத்திய வல்லுனராகவும்,

நுண்ணிய புத்திமானாகவும், நல் விளக்கமுடையவராகவும் இருப்பவர்களேயாகும்.

**ஙைறு முஜ்தஜிதுகள் என்பார்கள்:**

மேற்கண்ட தகுதிகள் இல்லாதவர்களாகும். இவர்களுக்கு முகல்லிதுகள் என்றும் சொல்லிக் கொள்ளலாம்.

(ஹைறு முஜ்தஹிதுகளான) இவ்வகுப்பினருக்குத் தான் (முஜ்தஹிதுகளான) அவ்வகுப்பாரை தக்லீது செய்வது கடமையாகும். முஜ்தஹிதுகள் மற்றவர்களை தக்லீது செய்வது கடமையல்ல, தடையாகும்.

(மார்க்க மேதைகளான) முஜ்தஹிதுகள் ஆறு படித்தரங்களில் இருக்கின்றனர்:

1. **முஜ்தஹிதுன் கு பிஷ்ஷர:-**

இஜ்திஹாது செய்வதற்கான சட்டங்களை வகுத்தவர்கள் இவர்களேயாகும். (உ-ம்)தகை சிறந்த இமாம்கள் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அபூஹனீபா ரஹுல்லாஹ் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அஹ்மதிப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ்

2. **முஜ்தஹிதுன் குபில் மத்ஹப்:-**

இவர்கள் உஸூல் சட்டங்களில் அவர்கள் தம் இமாம்களை பின் தொடர்வதோடு கிளைகளான உட்பிரிவு மஸ்அலாக்களை சுயமாக கிரகித்தெடுக்க, தகுதி பெற்றவர்களாக இருப்பவர்கள். (உ-ம்) (ஹனபி மத்ஹபில்) இமாம் அபூ யூசுப் ரஹிமஹுல்லாஹ், முஹம்மது ரஹிமஹுல்லாஹ் இப்னு முபாரக் ரஹிமஹுல்லாஹ், (ஷாபிஈ மத்ஹபில் முஸ்னி ரஹிமஹுல்லாஹ், புவைதி ரஹிமஹுல்லாஹ்)

3. **முஜ்தஹிதுன் குபில் மஸாயில்:-**

இவர்கள் உஸூல் சட்டங்களிலும், உட்பிரிவு மஸ்அலாக்களிலும் அவர்கள் தம் இமாம்களை பின் தொடர்வதோடு, எவைகளில் இமாம்களின் நேரடி சொற்கள் வரவில்லையோ அவைகளில் குர்ஆன், ஹதீது போன்ற ஆதாரங்களை முன்வைத்து இஜ்திஹாதி செய்து மஸாயில்களை எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர்;கள். (உ-ம்) (ஹனபி மத்ஹபில்) அபூ ஜஃபர் தஹாவி ரஹிமஹுல்லாஹ், பக்ருத்தீன் காழிகான் ரஹிமஹுல்லாஹ், ஷம்ஷுல் அயிம்மா சர்கஸி ரஹிம{_ல்லாஹ், (ஷாபிஈ மத்ஹபில் கல்விக் கடல் கஸ்ஸாலி இமாம் ரஹிமஹுல்லாஹ்)

4. **அல்ஹா புத்தக்ரீஜ்:**

இவர்களுக்கு இஜ்திஹாது செய்யும் சக்தி அறவே இல்லை எனினும் உஸூல் சட்டங்கள் அனைத்தையும் சூழ்ந்தறிந்து கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பதனால் இமாம்களின் மூடலான சொற்கள், சட்டங்களை விபரித்து தெளிவுபடுத்திக் கூறிட இவர்களால் முடியும்

(உ-ம்) (ஹனபி மத்ஹபில் இமாம் கர்கி ரஹிமஹுல்லாஹ், இமாம் ரஹிமஹுல்லாஹ் (ஷாபிஈ மத்ஹபில் இமாம் ராபிஈ ரஹிமஹுல்லாஹ், இமாம் றலவி ரஹிமஹுல்லாஹ்)

5. **அஸ்ஹாபுத் தர்ஜீஹ்:**

இவர்கள் அவர்கள் தம் இமாம்களிடமிருந்து வந்துள்ள இரு சொற்களில் ஒன்றை மற்றதைக் காண தர்ஜீஹ் முறுகுதலாக்கி கூறுவார்கள். இவ்வாறே இமாம்களின் சொற்களுக்கும், அவர்கள் தம் சிஷ்யர்களின் சொற்களுக்குமிடையில் முரண்பாடு வருமானாலும் ஒன்றை முறுகுதலாக்கி இதுவே நலமானது. இதுவே மிகச் சரியானது என்று கூறிடும் தகுதி பெற்றவர்கள்.

(உ-ம்) ஹனபி மத்ஹபில்) குதூரி, ஹிதாயா கிரந்தங்களின் ஆசிரியர்கள் ரஹிமஹுல்லாஹ், (ஷாபிஈ மத்ஹபில் இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ், இமாம் ராபிஈ ரஹிமஹுல்லாஹ்)

6. **அஸ்ஹரபுத்தம்யீஸ்:**

இவர்கள் மத்ஹபின் வெளிப்படையானவைகளையும், அரிதானவைகளையும், பலஹீனமானவைகளையும், ஊர்ஜிதமானவைகளையும் பகுத்தறிவிப்பவர்கள்.

மறுக்கப்பட்டவைகளையும், பலஹீனமான அறிவிப்புகளையும், களைந்துவிட்டு கவனிக்கப்பட வேண்டியவைகளையும், ஊர்ஜிதமானவைகளையும் எடுத்துரைப்பவர்களுமாவார்கள்.

(உ-ம்) ஹனபி மத்ஹபில்) கன்ஜு, துர்ருல் முக்தார் போன்ற நூலாசிரியர்கள் (ஷாபிஈ மத்ஹபில் இமாம் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ், இமாம் ரமலி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் மற்றவர்களும்)

மேற்கூறப்பட்ட ஆறு தன்மைகள் இல்லாதவர்கள் சுத்தமான முகல்லிதுகளாகும்.

(உ-ம்) நாமும் நம் காலத்து உலமாக்களும் இவ்வுலமாக்கள் இமாம்களின் நூற்களை உற்று நோக்கி மக்களுக்கு மஸ் அலாக்களை எடுத்துக் கூறுகின்றனர்.

சுயமாக இஜ்திஹாது செய்து எதையும் கூற அவர்கட்கு உரிமையும் தகுதியும் இல்லை.

முஜ்தஹிதுகள், பிறரை தக்லீது செய்வது பின்தொருதல் ஹராம்-கூடாது என நாம் முன்பு கூறியுள்ளோம். அது போன்று மேற்கண்ட ஆறு தரங்களிலுள்ளவர்கள் தங்கள்

தரங்களிலுள்ள எவரையும் தக்லீது செய்யலாகாது. கீழ்த் தரங்களிலுள்ளவர்கள் மேல் தரங்களிலுள்ளவர்களை தக்லீது செய்தேயிருப்பார்கள்.

(உ-ம்) இமாம் அபூ யூசுப் ரஹிமஹுல்லாஹ் அவர்களும், இமாம் முஹம்மது ரஹிமஹுல்லாஹ் அவர்களும், இமாம் முஹம்மது ரஹிமஹுல்லாஹ் அவர்களும் உஸூல் சட்டங்களில்; இமாமுல் அஃலம் அபூஹனிபா ரஹிமஹுல்லாஹ் அவர்களை தக்லீத் செய்தவர்கள் தான்.

எனினும் உட்பிரிவுகளான மஸாயில்களில் தாங்கள் முஜ்தஹிதுகளாக இருக்கின்றார்கள். முகல்லிதுகள் அல்லர்.

.நமது இவ்விளக்கத்தால் இமாம் அபூயூசுப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் முஹம்மது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹனபிகள், முகல்லிதுகள், அப்படியிருந்தும் பல்வேறு இடங்களில் இமாமுல் அஃலம் ரலியில்லாஹு அன்ஹு அவர்கட்கு மாற்றம் செய்வதேன்? என்று இமாம்களை தக்லீது செய்யாதவர்கள் நம் மீது தொடுக்கும் கேள்வி அகன்று விடுகின்றது. காரணம்.

இவர்கள் உஸூல் சட்டங்களில் முகல்லிதுகள். அவைகளில் மாற்றம் செய்யார்கள் உட்பிரிவுகளான மஸாயில்களில் மாற்றம் செய்வார்கள.; இவைகளில் சுயமாக இஜ்திஹாது செய்கின்றனர். எவரையம் இவைகளில் தக்லீது செய்யமாட்டார்கள்.

இன்னும் நீங்கள் அநேகமாக மஸாயில்களில் இமாம் அபூயூசுப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் முஹம்மது ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சொற்கள் அடிப்படையில் தானே பத்வாக்கள் வழங்குகிறீர்கள். இமாமுல் அஃளம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தம் சொற்களை விட்டு விடுகின்றீர்களே! அப்படியானால் நீங்கள் எங்ஙனம் ஹனபீகளாகுவீர்கள்? என்று கேட்கப்படும் கேள்வியும் நீங்கி விடுகின்றது.

புகஹாக்களில் சிலர் 'அஸ்ஸாபுத்தர்ஜீஹ்' எனும் தரத்தில்; இருக்கின்றார்கள்;. இவர்கள் சில சொற்களை சிலவற்றைக் காண தர்ஜீஹ-மூர்ககமாக்கி வைக்கின்றார்கள.; இத்தகைய மேதைகளால் தர்ஜீஹ் செய்யப்பட்ட சொற்கள் காணப்பட்டால் இதன் அடிப்படையிலேயே பத்வாக்கள் வழங்கப்பட வேண்டும்.

இன்னும் நீங்கள் பற்பல இடங்களில் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சொற்;களை விட்டுவிட்டு அபூயூசுப் ரஹிமஹுல்லாஹ் முஹம்மது ரஹிமஹுல்லாஹ் இப்னு முபாரக் ரஹிமஹுல்லாஹ் இவர்களின் சொற்களையே கடைபிடிக்கின்றீர்கள்.

அதுபோதும் உங்களை 'ஹனபிகள்' என்றே சொல்லிக் கொள்கின்றீர்கள் 'யூசுபிய்யிகள்' என்றோ 'முஹம்மதிய்யிகள் என்றோ இப்னு முபாரக்கிய்யின் என்றோ சொல்வதில்லையே ஏன்? என்ற கேள்வியும் தூரமாகி விடுகின்றது, காரணம்,

அபூயூசுப் ரஹிமஹுல்லாஹ், முஹம்மது ரஹிமஹுல்லாஹ் இப்னு முபாரக்; ரஹிமஹுல்லாஹ், இவர்களின் அனைத்து சொற்களும், இமாமுல் அஃலம் அபூனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வடித்த உஸூல் சட்ட திட்டங்கள் மீதே அமைத்திருக்கின்றன.

எனவே இவர்கள் சொற்கள் யாவும் எதார்த்தத்தில் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களுடைய சொற்கள்தாம்.

ஆகவே எங்களை ஹனபிகள்- அபூ ஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களை தக்லீத் செய்தவர்கள் என்று கூறிக் கொள்வதில் வியப்பில்லை. (ஷாபியாக்களும் இதே அடிப்படையில்தான் இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ், இமாம் ராபிஃ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சொற்படி நடந்தாலும் தங்களை தங்களை ஷாபிய்யாக்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர் என்பதை இவண் உணர்க!)

அண்ணல் கோமான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொன்மொழிகள் அடிப்படையில் அமல் செய்வது எதார்த்தத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளை உள்ளடக்கிய திருக்குர்ஆன் படி அமல் செய்வதாகும்.(இது போன்றுதான் அதுவும் என்று உணர்க!)

மேலும் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நவின்றுள்ளார்கள:

'ஏதாவது ஹதீது சரியான் சான்றுடன் தரிபட்டுவிட்டால் அதுவே எனது மத்ஹபாகும்' என்று.

அதாவது நான் ஒவ்வொரு மஸ் அலாவிலும் ஒவ்வொரு ஹதீதிலும் எது சரியானது? எது பலஹீனமானது? எது உறுதிமிக்கது? என்றெல்லாம் நன்கு துருவி ஆராய்ந்துதான் சொல்லியிருக்கிறேன். அப்படியும் என் சிந்தைக்கு அப்பாற்பட்டு சான்றுள்ள சரியான வேறு ஹதீதுகள் காணப்பட்டடால் அதுவே எனது மத்ஹபாக அமையும் என்று சொன்னார்கள்.

எபனவே 'முஜ்தஹிதுன் பில் மத்ஹப்' எனும் தரத்திலுள்ளவர்கள், சரியான சான்றுள்ள தான ஹதீதுகளை கண்ணுற்றால் ஹதீதுகளின் படிதான் அமல் செய்வார்கள். இதனால் அவர்கள் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களை பின் தொடராதவர்கள் என்றாகி விடமாட்டார்கள். இமாமுல் அஃளம் ரஹிமஹுல்லாஹ் அவர்களால் உருவாக்கப்பட்ட சொல்லையும் பின் தொடந்தவர்களாகவே ஆவார்கள்.

எனவே இவர்களின் இக்கூற்றுகள் அனைத்தும் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்றாகவும், மத்ஹபாகவும் அமைந்து விடுகின்றன.

மிக வட்டுறுக்கமாகவே வரையப்பட்ட இவ்விளக்கத்தை மனதில் ஞாபகத்துடன் இருத்திக் கொண்டால் அனந்த மனந்த குதர்க்கமான பிரச்சனைகளை தீர்வு கண்டிட ஏதுவாயிருக்கும்.

சில **'ஹைறு முகல்லிதுகளான வஹ்ஹாபிகள்'** எங்களுக்கும் இஜ்திஹாது செய்வதற்கரிய திறன் இருக்கின்றது. ஆகையினால் நாங்கள் எந்த இமாமையும் பின் தொடரமாட்டோம்' என்று புலம்புகிறார்.

இவர்கட்கு அதிகமாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை. இஜ்திஹாத் செய்ய எந்த அளவு அறிவுத்திறன் அமையவேண்டும் என்ற ஓர் கேள்வி மட்டும் போதும். இதற்கு பதிலாக அடுக்கும் அறிவுத்திறன் அவர்களிடமாவது இருக்கிறதா? என்று நோக்கினால் அதுவும் அவர்களிடம் காணமுடியாது.

ஹழ்ரத் இமாம் ராஸி ரஹிமஹுல்லாஹ், இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் போன்ற வல்லுனர்கள் இமாம் திர்மதி ரஹிமஹுல்லாஹ், இமாம் அபூதாவூது ரஹிமஹுல்லாஹ் போன்ற ஹதீது மனன மிக்கவர்கள், ஹழரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு அன்ஹு, பாயஸீதல் பிஸ்தாமீ ரலியல்லாஹு அன்ஹு போன்ற குருநாதர்கள் உள்பட அனைவரும் இஸ்;லாத்தின் மேன்மக்களாக திகழ்ந்தது வெள்ளிடை. அப்படி இருந்தும் அவர்கள் முஜ்தஜிதுகளாக இருந்து புது மத்ஹபுகளை ஸ்தாபிக்காமல் இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களையோ, அல்லது வேறு இமாம்களையோ பின்தொடர்ந்த முகல்லிதுகளாகவே தான் வாழ்ந்திருக்கிறார்கள் என்றால்,

இக்காலத்தில் இஜ்திஹாது செய்யும் இமாம்களாக ஆகுவது ஒருபக்கம் இருக்கட்டும். இம்மேதைகளான நாதாக்களுக்கு நிகரானவர்களையாவது காணமுடிகிறதா? என்னே! அது போகட்டும் அவர்கள் கோர்வை செய்த நூற்களின் பெயர்கள் கூட இக்காலத்து வஹ்ஹாபிகட்கு தெரியாதே! எங்ஙனம் இஜ்திஹாது செய்யப் போகிறார்கள்?

ஒருவர் 'நான் இஜ்திஹாது செய்வேன். அதற்குரிய திறன் என்னிடம் இருக்கிறது' என்று என்னிடம் தாவா செய்துக் கொண்டிருந்தார்.

அவரிடம் அதிகமாக எதுவும் கேட்டுக் கொள்ள விருப்பமில்லாததினால் 'சூரத்துல் தகாதுரில்' எத்தனை மஸ்அலாக்களை நீர் கிரகித்தெடுத்தீர்? இன்னும் அதில் எத்தனை ஹகீகத், மஜாஸ், கினாயா, ழாஹிர், நஸ்ஸுகள் இருக்கின்றன? என்று ஒரு கேள்வி மட்டும் கேட்டேன். அவர் திகில் அடைந்து மௌன சாமியாக சமைந்து விட்டார். இப்பெயர் கூட அவர் செவிப்புலனில் இதுவரை மோதியதில்லை (சுப்ஹானல்லாஹ்) அவர் நினைத்தது போன்று 'இஜ்திஹாது' கடைச்சரக்கில்லை. சாமானியானதில்லை.

**தப்லீது கடமை என்பது பற்றி ஆதாரங்கள்**

இதை இரு பிரிவுகளாக அமைக்கின்றோம்.

ஒன்றாவது- பொதுவாக தப்லீது செய்வது பற்றிய ஆதாரங்கள்.

இரண்டாவது- தப்லீது ஷக்ஸி – தனிநபரை தக்லீது செய்வது பற்றிய ஆதாரங்கள்.

**ஒன்றாவது பிரிவு:**

தக்லீது செய்வது கடமை என்பது திருக்குர்அன் வசனங்கள், சஹீஹான ஹதீதுகள், உம்மத்துக்களின் நடைமுறைகள், முபஸ்ஸிரீன்களின் சொற்கள் ஆகியவைகளால் தரிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக தக்லீது செய்வது என்பது (பற்றிய ஆதாரங்கள்) முஜ்தஹிதின்களான இமாம்களை தக்லீது செய்வதையும் தரிபடுத்தும்.

1. **இஹ்தினஸ்ஸிரலாதல் முஸ்தகீம்:**

நேரான வழியில் எங்களை நடத்தாட்டுவாயாக!(அவ்வழி) நீ எவர்கள் மீது உபகாரம் புரிந்தாயே அவர் (கள் நபிமார்கள், சித்தீகீன்கள், ஷுஹதாக்கள், சாலிஹீன்) களது வழி, (அல்குர் ஆன்:1-6)

நேரான வழி என்பது (மேற் கூறப்பட்ட) நன்மக்கள் சென்ற வழியேயாகும்.

அனைத்து முபஸ்ஸிரீன்களும், முஹத்திதீன்களும், புகஹாக்களும், அவ்லியாக்களும், கௌது, குத்புமார்களும், இறையருளை பெற்ற நன்மக்கள் அனைவரும் இமாம்களை தக்லீது செய்தவர்களாகவே சென்றிருக்கிறார்கள்.

ஆகவே தக்லீது என்பது தான் 'ஸிராதே முஸ்தகீம்' நேரான வழி.

2. **லாயுகல்லியுல்லாஹு நப்ஸன் இல்லா உஸ்அஹா**

அல்லாஹுதஆலா எந்த ஆத்மாவுக்கும் அதன் சக்திக்கேற்பவேயன்றி கஷ்டம் கொடுக்கமாட்டான்.

(ஆல்-குர்ஆன் 2-286)

சக்திக்கு அப்பாற்பட்ட சுமைகளை அல்லாஹ் எவரின் மீதும் சுமத்தாட்டுவதில்லை என்பது தெளிவு.

அப்படியானால் இஜ்திஹாது செய்யவும், குர்ஆன் ஹதீதுகளிலிருந்து மஸாயில்களை கிரஹித்தெடுக்கவும் சக்தியற்றவர்கட்கு தக்லீது செய்யலாகாது. மஸாயில்களை தானே கிரஹித்து தான் எடுக்க வேண்டும் என்றால் சக்திக்கப்பாற்பட்ட சுமையைக் கொண்டு கஷ்டம் கொடுப்பதாகாதா?

ஏழையானவனுக்கு ஜகாத்தும், ஹஜ்ஜும் கடமைகளில்லை என்றிருக்கும் போது அறிவித்திறனில்லாதவனுக்கு அவனே மஸாயில்களை கிரஹித்துக்தெடுக்க வேண்டும் என்றிருப்பது எங்ஙனம் சரியாகும்?

3. **அஸ்ஸாபி கூனல் அவ்வலூன....**



www.sufimanzil.org

முஹாஜிரீன்கள், அன்ஸார்களில் நின்றும் முந்தியவர்களையும், இன்னும் அவர்களை நன்மையைக் கொண்டு பின் தொடர்ந்தவர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வை பொருந்திக் கொண்டார்கள்.

(அல்குர்ஆன் 9-101)

முஹாஜிரீன்கள், அன்ஸார்களை பின் தொடருவதில் அல்லாஹ்வின் பொருத்தம் இருக்கிறதென்பது இதன்மூலம் தெரிய வருகின்றது. இதுவும் தக்லீதுவாகும்.

4. **அதீவுல்லாஹ-வ அதீவுற்றஸூல வஉலில் அம்;ரி மின்கும்**

அல்லாஹுக்கு வழிப்படுங்கள், ரஸூலுக்கும், உங்களின் காரியஸ்தர்கட்கும் வழிப்படுங்கள். (அல்குர்ஆன் (4-58)

மூவருக்கு வழிப்பட்டு நடக்க வேண்டுமென இவ்வசனம் வலியுறுத்துகிறது.

1. அல்லாஹ் (அதாவது:- திருக்குர்ஆன்) 2, ரஸூல்லால்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (அதாவது: அவர்களது ஹதீதுகள்) 3, காரியஸ்தர்கள் (அதாவது: பிக்ஹு சட்ட நிபுணர்கள்)

1. அல்லாஹ் தஆலாவுக்கு வழிபடுங்கள், 2, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், காரியஸ்தர்களுக்கும் வழிபடுங்கள் என்று இரு இடங்களில் அதீவு வழிப்படுங்கள் என்ற வாக்கியத்தை கூறியுள்ளான் காரணம்.

அல்லாஹுக்கு வழிப்படுதல் என்பது அவனது சொல்லில் கட்டளையில் மட்டும் தான், செயலிலும், மௌனத்திலும் அல்ல. ஏனெனில்,

காபிர்களுக்கு அல்லாஹ் இரணமளிக்கிறான், வெளிரங்கத்தில் வெற்றியை கொடுக்கிறான். அப்படியும் அவர்கள் குப்ரையே மேற்கொள்கின்றனா.; உடனடியாக அதற்கான வேதனைகளை கொடுப்பதில்லை. இதில் நாம் அல்லாஹ்வை தொடர்ந்து காபிர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியதில்லை.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் நம் காரியஸ்தர்களான இமாம்களுக்கும் வழிபடுதல் என்பது அவர்களது ஒவ்வொரு சொல், செயல்களிலும் ஏதாவதொன்று அவர்கள் முன்னிலையில் நடந்து அதை அவர்கள் பார்த்து மௌனமாக இருந்தால் அந்த மௌனத்திலும் ஆக மூன்று விஷயங்களிலும் பின் தொடர வேண்டும்.

இப்பாகுபாடுகள் இருப்பதால் தான் இருமுறையாக அதீவு- வழிபடுங்கள் என்று பரித்து கூறுயுள்ளான்.

மேற்கண்ட திருவசனத்தில் வஉலில் அம்ரி மின்கும்- உங்களின் காரியஸ்தர்கள்' என்பதுக் கொண்டு கருத்து:- இஸ்லாமிய மன்னர்கள் (மார்க்க மேதைகளான புகஹாக்கள் அல்ல) என்று கூறினாலும்,

இஸ்லாமிய மன்னர்கட்கு வழிபடுதல் என்பது மார்க்கத்திற்கு ஏற்றமான காரியங்களில் தான். மாற்றமானவைகளில் அல்ல.

மன்னர்கள் மார்க்கத்திற்கு ஏற்றமானவை யாது? மார்க்க சட்டங்கள், ஆசாரங்கள் யாது? என்பவற்றை முஜ்தஹிதீன்களான மேதைகளான இமாம்களிடம் தான் கேட்டு தெரிந்துக் கொள்ள முடியும். அதுதான் நியதியுமாகும்.

சட்ட திட்டங்கள் இயற்றுவது மார்க்க மேதை, அவைகளை செயல்படுத்துவது மன்னர், பிரஜைகளுக்கு மன்னர் அதிகாரி, மன்னருக்கு மார்க்க மேதை அதிகாரி.

இப்படியானால் மன்னருக்கு வழிபடுதல் என்பது எதார்த்தத்தில் முஜ்தஹிதீன்களான மார்க்க மேதைகளுக்கு மன்னர் அதிகாரி, மன்னருக்கு மார்க்க மேதை அதிகாரி.

இப்போது 'உலில் அமர்' என்பது கொண்டு இஸ்லாமிய மன்னர்கள் என்று கருத்து கொண்டாலும் (நாம் கூறிவரும்) தக்லீது என்பது தரிபடுகின்றது.

**ஓர் நுட்பம்**

1. தௌ;ளத் தெளிவாக குர்ஆனில் கூறப்பட்ட சட்டம் (உ-ம்) கணவன் மரணமான பெண் நான்கு மாதம் பத்து நாட்கள் இத்தா இருக்க வேண்டும். இதற்கு அதீவுல்லாஹ் என்பதும்,

2. தௌ;ளத் தெளிவாக ஹதீது ஷரீபில் கூறப்பட்டுள்ள சட்டம் (உ-ம்) தங்க ஆபரணங்கள் ஆண்கள் அணிவது ஹராம், இதற்கு அதீவுற்றஸூல் என்பதும்,

3. குர் ஆனிலும், ஹதீதிலும் தெளிவாக காணமுடியாத சட்டம் (உ-ம்) மனைவியின் பின் தூவாரத்தில் புணருதல் ஹராம், இதற்கு வஉலில் அம்ரி என்பதும்,

இவ்வாறான மூன்று விதமான சட்டங்கள் இருப்பதாக மேற்கண்ட திருவசனம் அறிவிக்கின்றது.

5. பஸ் - அலூ – அஹ்லத் - திக்ரி - இன் குன்தும் - லாதஃலமூன் -

(மக்களே!) நீங்கள் அறியாதவர்களாக இருப்பின் அறிவுடையோர்களிடம் கேளுங்கள். (அல்குர்ஆன் 21-7)

எந்த மஸ்அலா தெரியவில்லையோ அந்த மஸ்அலா தெரிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று திருவசனம் அறிவிக்கின்றது.

அது போன்றே இஜ்திஹாது செய்ய திறனில்லாத்தவர்கள் திறனுடையோர்களிடம் கேட்டு தெரிந்து நடப்பதுதானே நியதி.

இவ்வசனத்தைக் கொண்டு கருத்து:- சரித்திர வரலாறுகளை கேட்டுத் தெரிவது தான். முன் தொடரும் இதையே காட்டுகின்றது என்று சிலர் செப்புகின்றனர்.

அது சரியன்று. காரணம், மேற்கண்ட வசனம் குறிப்பின்றி பொதுப் படையாவே வந்;துள்ளது. தெரியாமல் இருப்பதையே காரணம் காட்டி கேட்டு தெரிந்துக் கொள்ள வேண்டுமென வந்துள்ளது.

எனவே எது நமக்கு தெரியவில்லையோ அதுபற்றி தெரிந்தவர்களிடம் கேட்டு தெரிந்துக் கொள்வது கடமை என்பது தான் அவ்வசனத்தின் பொதுக் கருத்து.

**6. வத்தபி:- ஸபீல் - மன் அனாப - இலய்ய**

என்னளவில் மீண்டவர்களின் பாதையை பின் பற்றுவீராக! (அல்குர்ஆன்: 31-15) அல்லாஹ் அளவில் சென்றடைந்த சீதேவிகளான இறையன்பர்களின் வழியை தக்லீது – பின் தொடர வேண்டுமென்று இவ்வசனம் பொதுப் படையாகவே வந்துள்ளது.

**7. வஜ் அல்னா – லில் - முத்தகீன - இமாமா:-**

முத்தகீன்களுக்கு (பின் தெடர்கின்ற) இமாம்களாக எங்களை ஆக்குவாயாக! (அல்குர்ஆன் 25-74)

நாங்கள் முத்தகீன் - இறை பக்தியாளர்களை பின் தொடர்கிறோம். எங்களையும் முத்தகீன்களே பின் தொடருபவர்களாக ஆக்குவாயாக! என்ற விளக்கவுரை 'தப்ஸீர் மஆலிமுத்தன்ஸீலில'; எழுதப்பட்டுள்ளது.

எல்லோரும் இறையன்பர்களின் அடிச்சுவடுகளை பின்தொடர்ந்தவர்களாக இருந்து வர வேண்டுமென இவ்வசனம் உணர்த்துகின்றது.

**8. பலவ்லா – நபர – மின்குல்லி – பிர்கத்தின்...........**

ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு வகுப்பினர் (மட்டும் யுத்ததிற்கு) புறப்பட வேண்டாமா? மார்க்கத்தில் (உள்ள சட்டங்களை பெருமானிடம்) கற்றுக் கொள்ள (மற்றவர்கள் தங்கிருக்க வேண்டாமா? யுத்தத்திற்கு சென்ற) அவர்கள் இவர்கள் பக்கம் திரும்பினால் (கற்றவை)களை அவர்களுக்கு (எடுத்துரைத்து) எச்சரிக்கவும் (அல்லாஹ்வின் தண்டணையை) தவிர்த்துக் கொள்வார்கள். (அல்குர்ஆன் 9-123)

(பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யுத்தத்திற்கு செல்லாதிருக்கும் போது அவர்களால் குறிப்பிட்டவர்கள் மட்டுமே போர்க்களத்திற்கு செல்ல வேண்டும். மற்றவர் தங்கியிருந்து பெருமானாரிடம் கல்வி கற்க வேண்டும். அனைத்து கோத்திரர்களும்; ஒரு மொத்தமாக போர்க்களத்திற்கு செல்வதோ, அல்லது அனைவரும்

கல்விகற்பதில் ஈடுபடுவதோடு தகாது. சிலர் கல்வி கற்பதிலும் மற்றும் சிலர் உலகயியலிலும் ஈடுபடவேண்டும்) இவர்கள் அவர்களை தக்லீது செய்ய வேண்டும் என இவ்வசனம் சாடையாக அறிவிக்கின்றது.

9. **வலவ் - ரத்தூஹு**

அதை (போர்க்களச் செய்திகளை) ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பக்கமும் காரியஸ்தர்கள் பக்கமும் மீட்டினால் அவர்களில் கிரஹித்தெடுப்பவர்கள் அதை (உண்மையா? பொய்யா? என்பதை) விளங்கிக் கொள்வார்கள். (அல்குர்ஆன் 4-82)

குர்ஆன் ஆயத்துகள், ஹதீதுகளை முதன் முதன்மையாக கிரஹித்தெடுக்கும் இமாம்களின் பக்கமே எடுத்துக்காட்ட வேண்டும். பின் அவர்கள் எதைக் கூறுகின்றனரோ அதன்படியோ அமல்செய்ய வேண்டுமென்று தெளிவாக இவ்வசனம் அறிவிக்கின்றது.

போர்க்கள செய்திகளையே கிரஹித்தெடுப்பவர்களிடம் எடுத்துக் கூற வேண்டுமென்றிருக்கும் போது அச்செய்திகளைக் காண மிகப் பெரிதானவைகள் அல்லவா குர்ஆன் வசனங்கள்? நாயகப் பெருமானரின் பொன்மொழிகள்?

ஆகவே முஜ்தஹிதான இமாம்களிடம் எடுத்துக் கூறுவது அவசியமாகும்.

10. **யவ்ம – நத்வு – குல்ல – உனாசின் - பி இமாமிஹிம்:**

ஒவ்வொரு மக்களையும் அவர்களது இமாம்களுடனே அழைப்போம். (அல்குர் ஆன் 17-71)

('இமாம்' என்பதற்கு நபிமார்;கள் என்றும்;, வேதங்கள் என்றும் பல கருத்துரைகளை முபஸ்ஸிரீன்கள் வழங்கியுள்ளனர்)

'எந்தெந்த மத்ஹபின்படி கிரிகைகளை செய்து வருகின்றார்களோ அந்த மத்ஹப்பிற்குரியவர்களுடன் சேர்த்து ஷாபிய்யாக்களே! ஹனபிய்யாக்களே! மாலிகிய்யாக்களே என்றழைக்கப்படுவார்கள்' என்றே விளக்கமும் 'இமாம்' என்பதற்கு கொடுக்கப்படுகின்றது. (ஆதாரம் தப்ஸீர் சாவி - ரூஹுல் பயான்)

இமாம்களை பின்பற்றாதவர்களை ஷெய்த்தானுடன் சேர்த்தழைக்கப்படுமென்று கண்ணியத்திற்குரிய சூபிய்யாப்பள் கூறியுள்ளார்கள்.

11. **வஇதா – கீல லஹும் - ஆமினூ................**

(நன்) மக்கள் ஈமான் கொண்டது போல் நீங்களும் ஈமான் கொள்ளுங்கள் என்று (முனாபிகீன்களிடம்) சொல்லப்பட்டால், மடையர்கள் ஈமான் கொண்டது போல் நாங்களும் ஈமான் கொள்வோமா? என்று (முனாபிகீன்கள்) சொல்வார்கள் (அல்-குர்ஆன் 3:18)

சாலிஹீன்களான நன் மக்களது ஈமான் போல் இருக்கும் ஈமானுக்குத்தான் மதிப்புண்டு என்று இருக்கும் போது நன் மக்களது மத்ஹபுகள்தான் நல்வழி. அதுவே நம்வழி.

**முபஸ்ஸிரீன், முஹத்திதீன்களின் சான்றுரைகள்:-**

'அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள், ரஸூலுக்கும் உங்களின் காரியஸ்தர்களுக்கும் வழிபடுங்கள் (4-58)

என்ற திருவசனத்தில் 'காரியஸ்தர்' எனபதின் கருத்து, மார்க்கக் கல்வியுடையவர்கள் என்பதாகும்.

அறிவிப்பாளர்: அதாவு (ரலியல்லாஹு அலைஹி நூல்: தாரபி பாபுல் இக்திதா ஃ பில் உலமா

மக்களே நீங்கள் அறியாதவர்களாக இருப்பின் அறிவுடையோர்களிடம் கேளுங்கள். (21-7)

இத்திருவசனத்தின் கருத்து: குர்அனை நன்கு விளங்கிய மு ஃமின்களிடம் கேளுங்கள் என்பதாகும். (தப்ஸீர்காஜீன்)

'ஒருவன் தொழுகிறான், நோன்பு நோக்கிறான், ஹஜ்ஜும் (இறைவழியில்) போரும் செய்கின்றான். நிச்சயமம் அவன் முனாபிக்காக இருக்கிறான்' என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

எங்ஙனம் அவனில் முனாபிக்குத்தனம் புகுத்தது? என சஹாபாக்கள் விசாரித்தார்கள்.

'அவன் தனது இமாமை குறைவு தடுத்தினதால்' என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் பகர்ந்தார்கள். அவனது இமாம் யார்? என்ற போது, அல்லாஹ்வே தனது திருமறையில் 'பஸ்அலூ அஹ்லத் திக்ரி' (21-7) என்று வொல்லியிருக்கிறான் என்று பதில் சொன்னார்கள்.

ஆறிவிப்பாளர்:-அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) நூல்:- தப்ஸீர் துற்றல் மன்ஸூர்

(எனவே அறிவுடையோர்கள் என்பதின் கருத்து:-

குர்ஆனை நன்கு துருவி ஆராய்ந்த கண்ணியத்திற்குரிய இமாம்கள். இவர்களையே பின்தொடர வேண்டுமென்பது வெள்ளிடைமலை)

(சொல்லப்படும் கருத்துக்கள்) சஹாபாக்களின் சொல்லுக்கோ, சஹீஹான ஹதீதுக்கோ, குர் ஆன் ஆயத்திற்கோ ஒத்திருந்தாலும் கூட நான்கு இமாம்களின் சொற்களை தவிர மற்றவைகளை பின்பற்றலாகாது. அப்படி நான்கு மத்ஹபுகளை விட்டும் புறப்பட்டவன், வழி கெட்டவன். வழி கெடுப்பவன். சிலவேளை அது அவனை குப்ரில் சேர்த்து விடும். குர் ஆன், ஹதீதுகளின் வெளிக்கருத்தை மட்டும் எடுத்துக் கொள்வது குப்ரின் ஆணி வேராகும்.

(தர்ஸீர் ஸாவி 3-ம் பாகம் 9-ம் பக்கம்)

(அத்தீனு அன்னஸீகத்து- தீன் என்பது நன்னமையை நாடுவதாகும்' என்று நபிகள் நாயகம் ஸ்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள். யாருக்கு நாடுவது? என்று நாங்கள் கேட்டோம்;. அல்லாஹுக்கும், அவனது வேதத்திற்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம்களின் இமாம்களுக்கும், முஸ்லிம் பொது ஜனங்களுக்கும்' என்று பொருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பாளர்:- தமீமுத்தாரி (ரலியல்லாஹு அன்ஹு)

நூல்:- முஸ்லிம்1-ம் பாகம் 54-ம் பக்கம்

முஸ்லிம்களின் இமாம்கள்' என்பது நமது தீனடைய உலமாக்களான இமாம்களையும் எடுத்துக் கொள்ளும். அவர்களுக்கு நன்மை நாடுவதென்பது அவர்கள் அறிவித்த கருத்துக்களை ஒப்புக் கொள்வதும் சட்ட திட்டங்களில் அவர்களை பின் தொடருவதும், அவர்கள் மீது நல்லெண்ணம் வைப்பதுமாகும்' என்று இமாம் அல்லாமா நவவி ரஹிமஹுல்லாஹ் விளக்கம் தந்துள்ளார்கள்.

நூல், ஷரஹு முஸ்லிம்.

## இரண்டாம் பிரிவு

### தக்லீதே ஷக்ஸி- தனி நபரை பின் தொடருதல் பற்றியது.

'நீங்கள் ஒருவருக்கு கீழ் ஐக்கியமாக இருக்கும் போது உங்களது ஐக்கியத்தை உடைத்தெறிய நாடி உங்களிடம் ஒருவன் வந்தால் அவனை வெட்டி வீழ்த்துங்கள்' என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (மிஷ்காத் 320)

இமாம்களை, மார்க்க அறிஞர்களை பின் பற்றி நடப்பதையும், மார்க்கத்திற்கு முரண்பாடில்லா காரியங்களில் நாட்டுதலைவர்களை பின் தொடர்ந்து ஐக்கியமாக வாழ வேண்டுமென்பதையும் இந்த ஹதீது அறிவிக்கின்றது.

இமாம் முஸ்லிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது சஹீஹு முஸ்லிம் ஷரீபில்,

'பாவமில்லாதவற்றில் தலைவர்களுக்கு வழிப்படுதல் வாஜிபு-அவசியம்' என்று தலைப்பிட்டு ஒரு பாடமே அமைந்துள்ளார்கள்.

'இந்த பண்டிர்(இப்னு மஸ்வுது ) உங்களில் இருக்கும் போது என்னிடம் எதையும் கேட்காதீர்கள்' உன்று அபுமூஸா அஷ்அரி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் இப்னு மஸ்வுத் (ரலியல்லாஹு அன்ஹு ) அவர்களை பற்றி சொன்னார்கள்.

(மிஷ்காத் 264)

சிறப்புற்றவர் இருக்கும் போது மற்றவரை பின்தொடரலாகாது என்றும், ஒவ்வொரு முகல்லிதும் தங்களது இமாமே மேலானவர் என்ற சிந்தையை இருத்தி கொள்ள வேண்டுமென்றும் இந்த ஹதீது அறிவிக்கின்றது.

'முஸ்லிம் பெருங்குடி மக்களின் பொதுப்பணிகளில் பொறுப்பேற்றவன் (தலைவராக ஏக மனிதராக நியமிக்கப்பட்டவன், தனது பணியை தொடர அதிகாரி ஒருவர் தேவைப்படும்போது) குர் ஆன் ஹதீதுகளை நன்கு தெரிந்தவன் இருக்கும் போது இவனை தனக்கு அதிகாரியாக நியமனம் செய்யாமல் இவனைக்காண குறைந்தவனை அதிகாரியாக நியமனம் செய்தால், அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் ஸல்லல்லாஹூ அலைஹு வஸல்லம் அவர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் இந்த தலை)வன் மோசடி செய்து விட்டான்' (பத்ஹுல் கதீர்)

'எவன் தனது கழுத்தில் (இமாமு;கு கட்டுப்பட்டு நடக்கும்) பை -அத் உடன்பாடில்லாமல் மரணமாகின்றேனோ அவன் அஞ்ஞான காலத்தில் செத்த மாதிரி சாகுவான்.'

அறிவிப்பாளர் :-முஸ்லிம்.

நூல்:- மிஷ்காத் 350

இமாம்களை தக்லீது – பின் தொடரும் பை அத்தும், ஷெய்குமார்களின் தொடர்பை உண்டாக்கும் பை அத்தும் இ;ந்த ஹதீதில் உள்ளடங்கும்.

இப்பொதுக் கருத்தில்லையென்றால் இந்திய திருநாட்டில் வஹ்ஹாபிகள் எந்த இமாமிடம் இந்த ஹதீதுபடி பைஅத்து செய்வார்கள்?

திருமறை வசனங்களில், நாயகத் திருமேனியின் பொன்மொழிகளில், சிலவற்றையே இங்கு மேற்கொள் காட்டினோம். அனந்தமனந்தம் நம்மால் முடியும். போதுமென்ற மனதுடன் சுருக்கப்பட்டுள்ளது.

தகவுத் தாபீயீன்கள் காலம் தொடுத்து இன்றளவும் இஸ்லாமிய குடிமக்களை பாருங்கள்! இஜ்திஹாது செய்ய தகுதயற்றவர்கள், தகுதியுள்ளவர்களை தக்லீது செய்தே வாழையடி வாழையாக வந்துள்ளார்கள். இது சமுதாயத்தின் ஏகோபித்த முடிவாகும். இந்த முடிவுக்கு ஐக்கியப்பட்டு நடக்க வேண்டுமென்பது குர்ஆன் ஹதீதுகளால் தரிப்பட்ட ஒன்றாகும். இது அவசியமாகும்.

'நேர்வழி தெளிவான பின் எவர்கள் ரஸூலுக்கு (அவர்கள் கொண்டு வந்தவைகளில்) மாற்றம் செய்து, மு:ஃமின்களில் வழி அல்லாத மாற்று வழியை பின் பற்றுகின்றார்களோ அவர்களை (அவர்கள் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட வழிகேட்டில்) நரகில் அவர்களை புகுத்துவோம். (அல்குர் ஆன் 4-114)

முஸ்லிம் பொது ஜனங்கள் எவ்வழியை தேர்ந்தெடுத்தார்களோ அவ்வழியை நாமும் தேர்ந்தெடுத்து போகுவது பர்ளு-கடமை என்பதை இவ்வசனம் உணர்த்துகின்றது. அம் மக்கள் தேர்ந்தெடுத்த வழிதான் தக்லீது எனும் வழி. அதுவே நல்வழி. நம்;மவர் வழி. (மிஷ்காத்)

'முஃமின்கள் எதை நல்லதாக கருதுகின்றனரோ அது அல்லாஹ் இடமும் நல்லது தான்' (அல-;ஹதீது) அன்றும், இன்றும் உலக முஸ்லீம்கள், அரேபியர்களும், அஜமியாக்களும் தனி நபரை - இமாமை பின் தொடர்ந்தே வந்துள்ளார்கள்.

எவன் தக்லீது செய்யவில்லையோ அவன் உலக நியதியான இக் கட்டுக்கோப்பை உடைத்த பாவியாவான்;. இப்படிப்பட்ட இவன் முதலாம் கலீபா அபூபக்கர் சித்தீக் ரலியல்யல்லாஹு அன்ஹு இரண்டாம் கலீபா உமர் ரலியல்லாஹு அன்ஹு அன்ஹு ஆகியவர்களின் கிலாபத் - குடியரசு ஆட்சியை எங்ஙனம் ஏற்றுக் கொள்ளப் போகிறான்? இவர்களது ஆட்சிப் பொறுப்பு பொது மக்களால் ஏகோபிக்கப்பட்டதல்லவா?

'இதை மறுத்தவன் காபிராகி விடுவான்' (ஆதாரம் ஷாமி)

இது போன்றுதான் தக்லீதுமாகும். முஹாஜிரீன்களை குறித்து குர்ஆன் 'உலாயிக - ஹுமுஸ்ஸாதிகீன் - அவர்கள் தான் மெய்யன்பர்கள்' என்று கூறுகின்றது.

இன்னும் 'வகூனூ –மஅஸ்ஸாதிகீன் - மெய்யன்பர்களுடனே இருந்து வாருங்கள்' என்றும் கூறுகின்றது.

எனவே அன்ஸாரிகளே! நீங்கள் எங்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பு தாருங்கள்! உங்களுக்கென்று தனி ஆட்சியை அமைக்காதீர்கள் என்று அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் சமயம் கூறினார்கள் (தப்ஸீர் காஜின்)

மெய்யன்பர்கள் அனைவரும் தக்லீது செய்துள்ளார்கள்.

ஙைர முகல்லிதுகளே – தக்லீது செய்யாத துர்பாக்கியசாலிகளே! நீங்கள் மெய்யன்பர்களுடன்; தக்லீது செய்ய முன் வாருங்கள் என்று அறிவுரை கூறுகின்றோம். வாரீர்!!

**தக்லீது பற்றிய யுக்தி ஆதாரங்கள்:**

உலகளவில் மற்றவனை பின் தொடராது இருக்க முடியாது. ஓவ்வொரு தொழிலாளியும் அத் தொழிற் கலையில் நுட்பமானவர்களை பின்பற்றியே செயலாற்றுகின்றனர். உலகியலைக் காண மார்க்க இயல் மிக சிக்கலானது. இதில் அவசியம் அவ்வியலில் விற்பன்னர்களை பின் தொடர்ந்தேயாக வேண்டும்.

ஹதீது கலையிலும் தக்லீது இருக்கிறது. இன்ன ராவி- அறிவிப்பாளர் ளயீபானவர் என்று ஹதீதுக் கலை நிபுணர்களில் ஒருவர் சொல்லுகிறார். ஆனதினால் இந்த அறிவிப்பாளர் கூறும் இந்த ஹதீது ளயீபு –பலஹீனமானது என்று சொல்கின்றோம்.

இது இமாம் புகாரி (ரலியல்லாஹு) அவர்களை போன்ற ஹதீது நிபுணரை தக்லீது செய்வதாகும்.

இது போன்று குர்ஆன் ஷரீபை ஓதவதிலும் கூட தக்லீது இருந்து கொண்டிருக்கின்றது. இன்ன காரி அவர்கள் இந்த வசனத்தை இவ்விதமாக ஓதினார்கள் என்று சொல்வதும், ஓதுவதும் அவரை தக்லீது செய்வதாகும்.

இதுபோன்ற குர்ஆனின் வசனங்களுக்கு ஸேர், ஸபர், பேஷ் வைப்பதிலும,; ஆயத்துகளை எண்ணிக்கை கொள்வதிலும்; அதற்குரியவர்களை தக்லீது செய்யப்பட்டிருக்கிறது.

தொழுகை ஜமாஅத்தாக நடைபெறுகின்ற போது மஃமூம்கள் இமாமை தக்லீது – பின்தொடருகின்றது.

ரயில் பிரயாணம் செய்யும் போது பிரயாணிகள் அனைத்து பேரும் ரயில் இஞ்சினைப் பின் தொடர்கின்றனர். சுருங்கக் கூறின் உலகாதி காரியங்களில் ஒவ்வொருவரும் முகல்லிதுகளாக – பின் தொடர்பவர்களாகவே இருக்கின்றனர்.

இங்கு எடுத்தாளப்பட்டவைகள் அனைத்திலும் அதிலும் தொழுகையில் இமாம் ஒருவர் தான். இருவர் அல்லர். இப்படியாக தக்லீது ஷக்ஸி – தனி நபரை பின்தொடருதல் இருக்கும் போது ஷரீஅத்திலும் தக்லீது செய்யும் இமாம் ஒருவராகத்தான் - தக்லீது ஷக்ஸியாகத்தான் இருக்க முடியும்.

'பிரயாணத்தில் மூவர் இருந்தால் அவர்களில் ஒருவரை இமாமாக நியமித்துக் கொள்ளட்டும்' என்று மிஷ்காத் 339-ம் பக்கத்தில் வந்துள்ளது.

எதிர் வாதம் புரிபவர்கள் தங்கள் ஆட்சேபணைகளை இரண்டு வகைகளாகத் தொடுக்கின்றனர்.

குத்தலாகவும், கேலி நையாண்டியாகவும் கேட்பது ஒருவிதம். இவற்றுக்கெல்லாம் நாம் பதில் சொல்லிக் கொண்டிருப்பது தரமல்ல.

முகல்லிதுகளான (இமாம்களை பின்பற்றக் கூடிய) நம்மவர்களை எவையெவைகளால் ஏமாற்றி, அவர்கள் தங்கள் கொள்கைகள் பால் மாற்றிவிடுகின்றனரோ அவைகள் மற்றொரு வகை.

இரண்டாவது வகையான ஆட்சேபணைகளுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். எனவே அவ்வகையான வினாக்களும், அதற்குரிய தக்க பதில்களும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி:- (நீங்கள் சொல்லி வருவது போல் அனைவர் மீதும்) தக்லீது செய்வது அவசியமாக இருந்தால் ஸஹாபாக்களும் முகல்லிதுகளாக இருந்திருப்பார்கள். அவ்வாறு முகல்லிகளாக இல்லாதிருப்பதேன்?

**பதில்:-** சங்கைமிகு ஸஹாபாக்களுக்கு தகலீது செய்வது அவசியமன்று. பெருமானாரின் சகவாசத்தின் பரக்கத்தால் ஒவ்வொருவரும் பெரும் பெரும் இமாம்களாக திகழ்ந்தனர் இம்மாமுல் அஃளம் அபுஹனீபா (ரஹிமஹுல்லாஹ்) இமாம் ஷாபியி (ரஹிமஹுல்லாஹ்) போன்றவர்கள் கூட பின்பற்றும் அளவிற்கு இருந்திருக்கின்றனர்.

'என் தோழர்கள் விண்மீன் போன்றவர்கள.; எவரேனும் அவர்களை பின்பற்றுவீர்களாயின் நேர்வழி அடைவீர்கள்' (மிஷ்காத் 554)

'எனது சுன்னத்தையும் குலாபாயே ராஷீதீன்களின்- வழிகாட்டிகளான (எனது) பிரதிநிதியாளர்களின்-சுன்னத்தையும் பற்றியும் பிடியுங்கள்' -அல்ஹதீது

மேலே கேட்கப்பட்டுள்ள கேள்வியானது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவருடைய உம்மத்தினராகவும் இருக்கவில்லை. எனவே நாமும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம் அவர்களின் உம்மத்துகளல்ல. இப்படி பிறரின் உம்மத்துகளாக இல்லாமிருப்பதே ரஸூலுல்லாஹ்வின் சுன்னத்-நடைமுறையாகும் என்று ஒருவன் சொல்வதைப் போன்றிருக்கிறது.

அவனுக்கு இப்படி பதில் சொல்ல வேண்டும்:- நாயகம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாமே நபியாக இருந்தார்கள். ஆகவே அவர்கள் மற்றவர்களது உம்மத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், நாம் ஒரு நபியின் உம்மத்தாக இருப்பது அவசியமாகும். இந்த வகையில் அருட்பெரும் தூதரான நாயகம் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்துகளாக நாமிருப்பது மிகப்பெரும் பாக்கியமாகும். அல்லாஹ்வின் அருட்கொடையாகும்.

இது போன்று சங்கை மிகு சஹாபாக்கள் அனைவரும் இமாம்களாக இருக்கின்றனர். அவர்கள் எந்த இமாமை பின் தொடர வேண்டும்?

ஆறுகளை விட்டும் தூரமாகயிருக்கும் வயல்களுக்கு வாய்க்கால் வழியாக நீர் பாய்ச்சப்படும். இமாமை விட்டும் தூரமாக நின்று தொழுபவர் முபலிக்கின்- எத்திவைப்பான் குரலை பின்பற்றி தொழுவார்.

ஆற்றங்கரையில் அமைந்த வயல்களுக்கு வாய்க்கால் தேவையில்லை. முதல் வரிசையில் நின்று தொழுபவர்களுக்கு முபல்லிக் தேவையில்லை.

மாண்புமிகு ஸஹாபாக்கள் முதல் வரிசையில் நின்று தொழுபவர்கள் போன்றவர்கள். இடைப் பொருளின்றி நேரடியாகவே பொருமானர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இதயக் கமலத்திலிருந்து அருள் பெறுகின்றவர்கள்.

நாம் பேரருள் பொங்கும் சமுத்திரத்தை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றோம். எனவே அவ்வருளை வாங்கி தரும் வாய்க்கால் பக்கம் தேவையுள்ளவர்களானோம்.

பெரும் நதியிலிருந்து எத்தனையோ சிற்றாறுகள் பெருக்கெடுத்தோடுகின்றன. அவைகளின் நீர் ஒன்று தான். பெயர்களும், வழிகளும் பல. கங்கை என்றும், ஜமுனா என்றும் காவிரி என்றும், தாமிபரபரணி என்றும் பெயர் பெறுகின்றது.

இவ்விதமே பெருமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ரஹ்மத்' என்னும் பெரும் சமுத்திரமாக இருக்கிறார்கள். அவர்களது ஹிருதய கமலத்திலிருந்து இமாம் அபுஹனீபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களது இதயத்திலிருந்து ஓர் ஊற்று பெருக்கெடுத்தோடி வருகின்றது அதைப் பருகுகிறவர்களுக்கு பெயர் ஹனபிய்யாக்கள்.

மற்றொரு ஊற்று இமாம் மாலிக் (ரஹ்மஹுல்லாஹ்) அவர்களது ஹிருதயத்தில் வழியாக வழிந்தோடுகின்றது. அது மாலிக் மத்ஹபு என்ற பெயர் பெறுகின்றது.

இவ்வாறான ஊற்றுப் பெருக்குகள் நமக்கு மிக முக்கியமாகத் தேவையாக உள்ளது. பெருமானாரின் வாய் மொழிகளுக்குரிய ஸனதுகள்- அத்தாட்சிகள் நமக்குத் தேவை! ஸஹாபாக்களுக்கு தேவையில்லை. (ஆகவே ஸஹாபாக்களுக்கு தக்லீது தேவையில்லை. ஆனால் நமக்கு மிக முக்கியமானது)

கேள்வி: வழி காட்ட வான் மறையும், நபி மொழியும் போதுமானது, ' எந்த பச்சை இலைகளும், காய்ந்த இலைகளும் வீழ்வதில்லை. அவைகள் மறையில் இருந்தே ஒழிய' 6-59

' சிந்திப்பதற்காக குர்ஆனை நாம் எளிதாக்கியுள்ளோம். சுpந்திப்பார் உண்டோ' (54-17)

இவ்வசனங்களினால்; 'குர்ஆனில் எல்லாம் உண்டு. குர்ஆன் எல்லோருக்கும் எளிதானது' என்று தெரிகிறது. பின் முஜ்தஹிதுகளான இமாம்கள் பக்கம் ஏன் செல்ல வேண்டும்?

பதில்: வான் மறையும், நபி மொழியும் வழிகாட்ட நிச்சயமாக போதும். எல்லாம் அவைகளில் உண்டு. எனினும் அவைகளில் இருந்து மஸ்அலாக்களை கிரகித்தெடுக்க ஆற்றல் வேண்டும் அல்லவா?

சமுத்திரத்தில் முத்துக்கள் இருக்கின்றன. எனினும் அவற்றை வெளிக் கொணர முத்துக் குளிப்பவர்கள் தேவைப்படுகின்றனர்.

நம் மார்க்க இமாம்கள் இக் கடலின் முத்துக்களை வெளிக் கொணருபவர்கள். மருத்துவ சாத்திரம் அனைத்தும் அதன் நூல்களில் நிரம்பி இருக்கின்றன. எனினும் மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெறுவது இன்றியமையாத ஒன்று!

நம் இமாம்கள் மார்க்க கலை மருத்துவர்கள். எனவே அவர்கள் ஆலோசனை படி நடப்பது தவிர்க்க முடியாததாகும்.

'குர்ஆனை நாம் எளிதாக்கியுள்ளோம்.'என்ற திருவசனத்திற்கு 'மனனம் செய்ய எளிதாக்கியுள்ளோம்' மஸ்அலாக்களை கிரகித்தெடுக்க அல்ல' என்றதொரு விளக்கம் தரப்பட்டுள்ளது.

அப்படி மஸ்அலாக்கள் குர்ஆனில் கிரகித் தெடுப்பதும் எளிதானதாக இருந்திருந்தால் நபிமொழியான ஹதீதுகள் தேவைதானா?

குர்ஆனில் எல்லாம் இருக்கின்றதே அதுவும் எளிதாக்கட்டப்பட்டுள்ளதே! பின் குர்ஆனை கற்றுக் கொடுக்கும் நபி ஏன் வர வேண்டும்? (இப்படி கேள்விக் கணைகள் தொடரலாம்.;)

'வாயு-அல்லி முஹுமுல் - கிதாப – வல் ஹிக்மத்த – அவர்களுக்கு குர்ஆனையும், தத்துவார்த்தங்களையும் கற்றுக் கொடுக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பினோம்' என்று குர் ஆன் பறை சாற்றுகின்றது.

ஆகவே வான்மறையும், நபி வழியும் இன்றியமையாத ரூஹானி ஒளடதமாகும். இமாம்கள் ரூஹானி மருத்துவ மேதைகளாகும்.

கேள்வி:

தக்லீதுச் செய்பவர்களை கெட்டவர்கள் என்று குர்ஆன் கூறுகிறது. 'இத்தகதூ அஹ்பாரஹும் ................................' அவர்கள் அல்லாஹ் அன்றி பாதிரிகளையும், பூசாரிகளையும் கடவுளராக எடுத்துக் கொண்டனர். (9-32)

*'ஃபஇன் - தனா ஸஃதும் - ஃபீஷையின் ..................'*

எதிலாவது நீங்கள் பிணங்கிக் கொண்டால் அல்லாஹ்வின் பக்கமும், அவனது தூதரின் பக்கமும் மீட்டிக் கொள்ளுங்கள் (4-58)

(நான் சொன்ன போதனைகளான) இதுவே செவ்வையான என் வழி. அதையே பின்பற்றுங்கள். அதற்கு மாற்றமான வழிகளைப் பின் பற்றாதீர்கள். அப்படி பின்பற்றுவீர்களாயின் என் வழியை விட்டும் நீங்கள் மாறிவிடுவீர்கள். (6-153)

இறைவன் இறக்கியருளியவற்றை பின்பற்றுங்கள் என (காபிர்களிடம்) கூறப்பட்டால் எங்கள் மூதாதையர்களை எதன் மீது நாங்கள் பெறற்றோமோ அதையே பின் பற்றுவோம் எனக் கூறுவார்கள் (2-170)

இவை, இவை போன்ற இதர வசனங்கள் மூலம் தெரியவருவதாவது: அல்லாஹ் ரஸூலின் சட்டங்கள் முன் இமாம்களின் சட்ட திட்டங்களை நம்புவது, காபிர்களின் வழிமுறையாகும். நேர்வழி ஒன்றாகத்தான் இருக்க முடியும். எனவே ஹனபி, ஷாபிஈ போன்றே நான்கு வழிகளும் கோணல் வழிகளாகும்.........?

**பதில்:**

திருக்குர்ஆன் எந்த தக்லீதை தீயது எனக் கூறியதோ அது பற்றி பூரண விளக்கம் இதன் முதல் பாடத்தில் தரப்பட்டுள்ளது.

'மாற்றமான வழிகளைப் பின்பற்றாதீர்கள்' என்ற திருமறை வசனத்திற்கு கருத்தாவது: யூதர்கள், கிருத்துவர்கள் போன்ற இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரண்பட்ட வழிகளைப் பின்பற்றாதீர்கள் என்பதாகும்.

ஹனபி, ஷாபிஈ போன்ற வழிகள் என்பதல்ல. இரயில் நிலையம் ஒன்றுக்கு நான்கு வழிகள் இருப்பது போன்றும், பெரும் நதியிலிருந்தும் பிரிந்து செல்லும் நான்கு சிற்றாறுகள் போன்றுமாகும்.

கைறு முகல்லிது – தக்லீது செய்யாத குழுவினர்களின் வழிகள் ஒவ்வொன்றும் வேறுபட்ட வழிகளாகும். அவர்கள் 'தனாயி' என்றும் 'கஜ்னவி' என்றும்; இருந்து வருகிறார்கள். இவர்களின் கொள்கைகள் மாறுபட்டதினால் இவர்களது வழிகளும் வேறுபட்டன.

ஆனால் ஹனபி, ஷாபிஈ என்பது அவ்வாறல்ல. இவர்களின் கொள்கை ஒன்று, கிளைகளான கிரியைகளில்தான் வேறுபாடு. இது ஸஹாபாக்களுக்கு மத்தியில் நிகழ்ந்த கருத்து வேறுபாடுகள் போன்றதாகும்.

கேள்வி:

'பெருமானாரின் சொற்கள் இருந்துக் கொண்டிருக்கின்றன. மற்றவரின் சொல், செயல்களை நம்பாதே! சத்திய மார்க்கத்தை நான்கு மத்ஹபுகளாக ஏற்படுத்தி நபியின் நன் மார்க்கத்தில் பித்னா – குழப்பத்தை விளைவித்துவிட்டனர்' என பாடலாக வினா எழுப்பப்பட்டுள்ளதே?

பதில்:

இப்பாடலில் கையாடல் பல செய்யப்பட்டுள்ளது. 'நபியின் சொல் செயல்களை நம்பாதே! என்று ஆணவத்தால் மிளிர்ந்தது. அது இறையாலயத்திலும் கூட பிரிவினைரியை உண்டாக்கி விட்டது. நபியின் நன்மார்க்கத்திலும் பித்னா –குழப்பத்தை விளைவித்து விட்டது' இதுதான் மூலப்பாடல். (இதை திரித்தும் கூட்டியும், குறைத்தும் வினாவாக எழுதப்பட்டுள்ளது)

நான்கு மத்ஹபுகள் பற்றி விரிவாக தெளிவாக நமது 'மணிக்கோவை'யில் பாடியுள்ளோம். அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

'ரஸூல்மார்களில் முக்கியமானவர்கள் நால்வர், முக்கிய அமரர்கள் நால்வர், நான்கு வேதங்கள், நான்கு மார்க்கங்கள், நிலம், நீர், தீ, வாயு ஆகிய நான்கின் மூலம் தான் உலகம் தரிபட்டிருக்கிறது.

புண்ணிய மிக்க கலீபாக்களும் நால்வர் தான். இறையோனுக்கு நான்கு மிக பிரீதியானது. வேதங்களையும் நான்காக அனுப்பினான், மார்க்கத்தையும் நான்காக அமைத்தான், மனித சுபாவத்தையும் நான்கு பொருள்களினால் படைத்தான். இலட்சியப் பாதைகள்

நான்கையும் பற்றி பிடித்தால் இலக்கை அடையாதிருக்க முடியுமா? வேறு பாதைகள் அவண் இல்லையே! நான்கு பாதைகள் மட்டும் தானே அவண் இருக்கும்.

(உலகின் கண் இறை ஆலயமான) 'கஃபா'வின் நான்கு திசைகளில் தொழுகை நடந்தேறிக் கொண்டிருக்கிறது. அனைவரின் முன்நோக்கல் திரு 'கஃபா' வாகத்தான் இருக்கிறது.

இது போன்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபாவாகயிருக்கிறார்கள். நான்கு மத்ஹபினர் நான்கு வழிகளை அமைத்தனர். (இதில்) எவ்வழியினாலும் சென்றடையலாம்.

'நான்கு மத்ஹபுகள், நான்கு வழிகள் போன்றாகும். எவ்வழி நடக்க நாடினாலும் அவ்வழி நட. மாற்று வழி நடக்க நீ குருடனாக இருக்கின்றாய்! எனவே கஃபாவை சாஷ்டாங்கம் செய்யும் திசையாக அமைத்திருக்கின்றாய்! என்று அருமையாக பார்ஸி கவிஞர் ஒருவர் பாடியிருக்கிறார்.

(வழி தெரியா விழி குருடர்கள் போன்று நாம் இருக்கும் போது அகமும், முகமும் ஒளிமயமானவர்களான இமாம்கள் சென்ற வழி நான்கில் ஒன்றை தக்லீது – பின்தொடர்ந்து செல்வது தவறில்லை.)

திருக்குர்ஆனை விளங்க ஹதீதுகள் தேவைப்படுவதை போன்று ஹதீதுகளை விளக்க பிக்ஹு தேவைப்படுகின்றது.

பிக்ஹு என்பது குர்ஆன், ஹதீதுகளின் விளக்கம்தான. எச்சட்டத்தை, திருக்குர்ஆனிலும், திரு நபிவாக்கியங்களிலும் காணமுடியவில்லையோ அச்சட்டத்தை பிக்ஹு விபரிக்கின்றது. (எனவே பிக்ஹு சட்டங்களும் அதை தாங்கி நிற்கும் மத்ஹபுகளும் நமக்கு மிக முக்கியமாகும்)

கேள்வி:

தக்லீது செய்யும் போது அல்லாஹ் அல்லாதவர்களை ஹாகிம் - நீதிபதியாக்குவது ஏற்படும். இது ஷிர்க்காகும். எனவே 'தக்லீதே ஷக்ஸி' – தனிநபரை பின் தொடருதல் ஷிர்க்காகும்;.

**பதில்:**

அல்லாஹ் அல்லாதவர்களை நீதிபதியாக்குவதோ, பஞ்சாயத்திற்கு வைப்பதுவோ ஷிர்க் என்றிருக்குமானால், திருநபி வாக்கியமான ஹதீது ஷரீபை நம்புவதும் கூட ஷிர்க் என்றாகிடும்.

மேலும் அனைத்து முஹத்திதீன் - ஹதீது கலைஞர்கள் முபஸ்ஸிரீன் - விரிவுரையாளர்கள் முஷ்ரிக்கீன்களாகிவிடுவர். இமாம் திர்மதி அபூதாவூது (ரஹிமஹுமுல்லாஹ்) ஆகியோர் முகல்லிதுகள்தான். இமாம் புகாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் முகல்லிதுகளின் சிஷ்யர்தான். (ஆதார நூல்: ஐன- ஷரஹ் புகாரி)

ஆக எல்லோரும் முஷ்ரிக்குகளாவர். இக் கேள்விக்கு பதிலை நமது 'தீவானே ஸாலிக்கில்' இமாமுல் அஃளம் அபூஹனீபா அவர்களே! உங்கள் தக்லீது செய்வது ஷரிக்கென்றிருக்குமானல், புகாரி முஸ்லிம், இப்னுமாஜா போன்ற எல்லா முஹத்திதீன்களும் முஷ்ரிக்குகளாவா.; எத்தனை எத்தனை புகஹாக்கள், முஹத்திதீன்கள் இருக்கின்றனரோ அத்துனை பேரும் உங்களது வித்தின் விளைப் பயிர்கள் தான். உங்களது துணையின்றி எவருமில்லை' என்று பாடியுள்ளோம்.

நபிமொழி அறிவிப்பவர் வரிசையிலே பாஸிக் பாவியான ஒரு அறிப்பாளர் புகுந்து விடுவாரேயானால் அவ்வறிப்புகளை ளயீபு – பலஹீனமான ஹதீது என்றோ, அல்லது மவ்ழுவு-புனையப்பட்ட ஹதீது என்றோ கூறுகின்ற போது அவ் வறிப்புகளில் முகல்லிதுவான அறிவிப்பாளர் புகுந்துவிட்டால் முஷ்ரிக்கான அறிவிப்பாளர் அல்லவா புகுந்துவிட்;டார்?

(இவ் வறிவிப்புகளை எங்ஙனம் ஏற்றுக் கொள்ள முடியும?;)ஆகையினால் மேற்கண்ட கேள்வி அனர்த்தமானது, பிழையானது.

திர்மதி இமாம், அபூதாவூது இமாம் போன்றவர்கள் முகல்லிதுகளாக ஆனபோது முஷ்ரிக்குகளாகி அவர்களது அறிவிப்புகள் தடைபெற்றன. புகாரி இமாம் போன்றவர்களது அறிவிப்புகள் முதன் முதன்மையாகவே தடைபெற்று விடும். காரணம், அவர்கள் முகல்லிதுகளாகவே இருந்துக் கொண்டு அறிவிக்கின்றார்களே! இப்படியானால் ஹதீது மாணிக்கங்களை எங்கிருந்து கொணர்வது?

(இவ்வாதம் எவ்வளவு அனர்த்தமான முடிவுக்கு இழுத்துக் கொண்டு விட்டு விட்டது பாரீர்!)

'(தம்பதிகளான) அவர்கள் இருவருக்குமிடையில் பிரிவினையை அறிவீர்களாயின், அவன் புறத்திலிருந்து ஒரு நீதிமானையும் அனுப்பி வையுங்கள். (4-34)' என்ற திவ்விய வான்மறை கூறிக் கொண்டிருக்கிறது.

(அல்லாஹ் மனிதர்களை தங்களுக்கிடையில் நீதிபதிகளாக நியமிக்கலாம் என்பதற்கு இவ்வசனம் தக்க சான்றாக இருக்கிறது)

ஹழ்ரத் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ' சிப்பின்' போரில் நீதிபதியாக ஒருவரை நியமனம் செய்துள்ளார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம் அவர்களும் ' பனூகுரைழா' குழுவினரின் வழக்கில், ஹழ்ரத் ஸஃதுப்னு முஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஹாகிமாக- நீதிமானாக நியமித்திருக்கிறார்கள்.

(வினாவில் கண்ட) வசனத்திற்கு 'ஹகீகி- யதார்த்தமான தீர்ப்பு வழங்குவது அல்லாஹ்வுக்கே அன்றி வேறெவருக்கும் இல்லை' என்று பொருள் கொள்ள வேண்டும்.

உலமாக்கள், புகஹாக்கள், குருநாதர்கள், இவ்விதமே ஹதீது ஷரீபில் வந்துள்ள அனைவர்களது தீர்ப்புகள் எல்லாம் பில்வாசிதா- இறைவனது துணைக் கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்புகளாகும்.

(இ;க் கருத்துக் கொள்ளாமல்) அல்லாஹ் அல்லாதவர்களை தீர்ப்பாளராக நம்பினால் ஷிர்க் என்று கருத்துக் கொண்டால், இன்று உலகில் நீதிமன்றம், கச்சேரி, பஞ்சாயத்துகள் என்று நியமனம் செய்யப்பட்டுள்ளவைகளை நம்புகின்ற போதே முஷ்ரிக்காகி விடுவான். ஆகவே உலகில் ஷிர்க்கை விட்டும் எவரும் தப்ப முடியாது போய்விடும்.

**கேள்வி:**

முஜ்தஹிது (இமாமு)டைய கியாஸ்- ஒழுங்குபடுத்தி எடுக்கப்பட்டது (வெறும்) எண்ணமாகும். (திண்ணமானது அல்ல.) எண்ணம் கொள்வது குற்றமாகும். இ(ப்படி) எண்ணம் கொள்வ)தை திருக்குர்ஆன் தடுத்துள்ளது.

'விசுவாசம் கொண்டவர்களே! எண்ணத்தில் நின்றும் அதிகமானவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள். நிச்சயம் சில எண்ணம் தவறில் ஆழ்த்துவதாக இருக்கிறது.((முஸ்லீம் பெருமக்களின்) குறைகளை துருவி பார்க்காதீர்கள். உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேசவும் வேண்டாம். (அல்குர்ஆன் 49-12)' எனவே சன்மார்க்கத்தில் குர்ஆன், ஹதீதுகளை கொண்டு மட்டும் செயல்பட வேண்டும்.

**பதில்:**

கியாஸ்- ஒழுங்குபடுத்துதல் என்று எதற்கு சொல்வது? அதன் சட்டங்கள் என்ன? என்பது குறித்து விரிவான விளக்கத்தை, பதிலை நாம் இதன் முடிவுரையில் வரைய இருக்கின்றோம்.(அவண் காண்க)

**கேள்வி:**

' ஏதாவது ஹதீது, சரியானது என ஊர்ஜிதமானால் அதுவே (அந்த ஹதீதுபடி அமல் செய்வதுவே) என் மத்ஹபாகும்' என்று இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் கூறியிருக்கிறார்கள். அதுவே அவர்களது சொற்கள் ஹதீதுக்கு மாற்றமானவையாக நாங்கள் பெற்றிருப்பதால் (அவர்களது மத்ஹபை பின் தொடருவதை விட்டும்) விட்டு விட்டோம்.

(தக்லீது செய்யாதவர்களான) கைறு முகல்லிதுகட்கு இதை விட அதிகமானதொரு ஆதாரம் கிடைக்காது. இதையே பொரிதாக்கி கொண்டு திரிகின்றார்கள்.

**பதில்:**

'சரியான ஹதீதுக்கெதிரில் என் சொல் நிகழ்த்திருக்குமானால், அதுபோது (என் சொல்லை விட்டுவிட்டு) ஹதீதுபடி அமல் செய்வது என் மத்ஹபுபடி அமல் செய்வதாகும்' என்பது இமாம் அவர்களின் கட்டளை. இது அவர்களது இறை பக்தியின் உச்ச ஸ்தானமாகும்.

எவ்விடத்தில் (ஆயத் ஹதீதுகளின்) தெளிவான ஆதாரம் இல்லையோ அவ்விடத்தில்தான் முஜ்ஹிதுகளின் கியாசை-ஒழுங்கு பிடித்தல் வருமென்பது யதார்த்தம். (கியாஸுக்கு எதிரில் ஊர்ஜிதமான சரியான ஹதீது வந்து விடுமானால் கியாஸுக்கு வழி இல்லை என்பது இமாம்;களின் ஏகோபித்த முடிவு.)

அனைத்து ஹதீதுகளையும், அவைகளது எல்லா அறிவுப்புகளையும் துருவி ஆராய்ந்தும், இமாம் (அபுஹனீபா)அவர்கள் இன்ன இன்ன சட்டங்களை இன்ன இன்ன ஹதீதுகளிலிருந்து எடுத்துள்ளார்கள் என்று அறிந்தும் வைத்துள்ள ஒரு முஹதித்தை, உலகில் இக்காலப் போக்கில் கண்டு கொள்ளத்தான் முடியுமா?

முக்களின் கண்ணோட்டம் ஸிஹாஹ் ஸித்தா-ஆறு ஹதீது களஞ்சியங்கள் பக்கம் கூட செல்லவில்லை என்றிருக்கும்போது, இமாம் அவர்கள் இச்சட்டத்ததை எந்த ஹதீதின் ஆதாரம் வைத்தும் எடுக்கவில்லைஎன்றும் இச்சட்டம் ஹதீதுக்கு மாற்றமாக இருக்கிறது என்றும் முடிவு செய்திட இயலுமோ?

இது போன்று திவ்விய திருநபி மொழியிலும்,' உங்களுக்கு என் புறத்திலிருந்து ஏதாவது ஹதீது கிடைக்குமானால் திருக்குர் ஆன் மீது ஒத்துப் பாருங்கள், நேர்படின் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிடின் ஒதுக்கித் தள்ளுங்கள்' என்று வந்துள்ளது. (தப்ஸீர் அஹ்மதிய்யா முன்னுரை பக்கம் 4)

(இதை அடிப்படையாக வைத்து) ' அதிகமான ஹதீதுகள் திருக்குர் ஆனுக்கு மாற்றமாக வந்துள்ளன. ஆகவே ஹதீதுகளை விட்டு விட்டோம்' என்றும்,

'மரணித்தவர்களின் ஆஸ்திகளை (வாரிசுகளுக்கு) பாகப் பிரிவினை செய்து கொடுங்கள்' என்று திருக்குர் ஆன் கூறுகிறது, ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஆஸ்தியில் (வாரிசுகளுக்கு) பாகப் பிரிவினை இல்லை என்று ஹதீது அறிவிக்கிறது' என்றும் ஒருவன் சொன்னால் அவனது சொல் எவ்வாறு மறுக்கப்படுமோ, அதுபோன்று (கேள்வி கேட்போரே!) உங்களது சொல்லும் மறுக்கப்படுகின்றது.

**கேள்வி:**

இமாமுல் அ.ஃளம் அபூனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு ஹதீதுகள் அதிகம் கிடைக்கவில்லை என்;பதினால் அவர்களது ஹதீது அறிவிப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. கிடைத்த ஹதீதுகள் அனைத்தும் கூட ழயீபு-பல ஹீனமானவைகளாகும்.

**பதில்:**

இமாம் அவர்கள் பெரும் ஹதீதுக்கலை விற்பன்னராக- முஹத்திதாக விளங்கினார்கள். அவர்கள் ஹதீதுகள் விளங்காமல் எங்ஙனமம் அவ்வளவு மஸ் அலாக்களை கிரஹித்தெடுக்க முடியும்?

அவர்களது ' முஸ்னது அபீஹனீபா' என்ற ஹதீது நூலும், இமாம் முஹம்மது ரஹிமஹுல்லாஹி அவர்களது 'முஅத்தா இமாம் முஹம்மது' என்ற ஹதீது நூலும் அபூஹனீபா ரஹிஹுல்லாஹ் அவர்களது ஹதீது கலை ஞானத்தை தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

ஸித்தீகே அக்பர் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஹதீது அறிவிப்புகளும் மிகக் குறைவாக இருப்பதினால் அவர்கள் முஹத்திது இல்லையா?

'பேணுதல்' என்ற அடிப்படையில் மிகக் குறைவாக வந்துள்ளது. (ஹதீதுகள் தெரியாது என்பதினால் அல்ல)

இமாம் அவர்களது அறிவிப்புகள் அனைத்தும் சஹீஹானவை- பலமானவை, சரியானவை, காரணம்:

இமாம் அவர்களது காலம், பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்திற்கு மிக சமீபமாக இருந்தது.

(பலஹீனம் ஏற்பட்ட நியதியில்லை) இமாம் அவர்களது அறிவிப்புகள் சிலவற்றில், அவர்களுக்கு பின்னுள்ள அறிவிப்பாளர்களில்- பலஹீனம் எற்பட்டிருக்கிறது. பின்னுள்ளவர்களில் பலஹீனம் ஏற்பட்டிருப்பது இமாம் அவர்களுக்கு பங்கமில்லை. எவ்வளவு தொலைவு ஏற்படுகின்றது அவ்வளவு பலஹீனமும் ஏற்படலாம் (ஆகவே இமாம் அவர்களது ஹதீதுகள் அனைத்தும் அவர்களது காலத்தில் பலமானவைகள் தான்)

ஹழ்ரத் முஆவியா(ரலியல்லாஹுஅன்ஹு) ஹழ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹு) ஆகியோர்களுக்கிடையிலும், அதுபோன்று ஹழ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹு) ஆகியோர்களுக்கிடையிலும் யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. ஹக் என்பது ஒருவர் பால் தான் இருக்க முடியும்.

எனினும் இரு வகுப்பாரும் ஹக்கின மீதே இருந்தார்கள் என்று கூறுகின்றோம். கருத்தாவது:- இரு வகுப்பாரும் இறையோனிடம் குற்றம் பிக்கப்பட மாட்டார்கள் என்பதுதான். (இது அவர்களது இஜ்திஹாதுகளால் ஏற்பட்ட விளைவு. இருவரும் நாம் ஹக்கின் மீதே இருக்கின்றோம் என்றே போராடினர்)

வனத்தில் 'கிப்லா' தெரியாது திகைத்து நிற்கின்றவன், தனது இஜ்திஹாதினால் நான்கு ரக் அத் தொழுகையை அவனது இஜ்திஹாது மாறுபட மாறுபட நான்கு திசையிலும் (நான்கு தடவை திருப்பி திருப்பி) தொழுதால் அவனது (அந்நேரத்) தொழுகை நிறை வேறிவிடும். (அவன் அதை கழா செய்ய வேண்டியதில்லை)

இவனுக்கு நான்கு 'கிப்லா'க்கள் அமைந்திருக்கிறது என்பது உண்மைதான். எனினும் யதார்த்தத்தில் 'கிப்லா' ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

இப்படி முஜ்தஹிதுகள் தவறிழைத்தாலும் ஒரு தவாபு- நன்மை அவர்களுக்கு கிடைக்காமல்' போகாது.

ஹழ்ரத் தாவூது (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இஜ்திஹாது (செய்து வழங்கிய தீர்ப்பு) தவறாகி விட்டது என்றும் (அவர்களது மகன்) ஹழ்ரத் சுலைமான் (அலைஹிஸ்ஸல்லாம்) அவர்களுடைய இஜ்திஹாது (செய்து வழங்கிய தீர்ப்பு) நேர்மையாகி விட்டது என்றும் திருக்குர் ஆன் விளக்கம் தந்துள்ளது. (அவர்களில்) எவரையும் இறையோன் தண்டிக்கவில்லை (குற்றம் பிடிக்கவில்லை) மாறாக,

'நாம் (இவர்களில் நின்றும்) ஒவ்வொருவருக்கும் தத்தவ ஞானத்தை கொடுக்கின்றோம்.' (21-79) என்று கூறி பெருமை படுத்துகின்றான்.

'நீதிமான தீர்ப்பளித்தால் (அத் தீர்ப்பில்) அவன் இஜ்திஹாது – முயற்சி செய்து நேர்மையை பெற்று விடுவானேயானால் அவனுக்கு இரண்டு கூலிகள் உண்டு. (ஒன்று அவனது முயற்சிக்கு. மற்றொன்று, அவன் அதில் நேர்மை பெற்றதற்கு). முயற்சி செய்து அதில் நேர்மையை பெறவில்லையானால் அவனுக்கு ஒரு கூலி (முயற்சி செய்ததற்கு) உண்டு என பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள். (மிஷ்காத் 324)

ஷாபிஈ மத்ஹபினர் (தொழுகையில் குனியும் போதும் நிமிரும் போதும்) கையை உயர்த்தினால் சரியாகும். ஆனால் தக்லீது செய்யாதவர்கள் அப்படி கையை உயர்தினால் குற்றமாகும். ஏன்? என்ற கேள்வியும் (நாம் மேல் கூறிய விளக்கத்தினால்) அகன்று போய்விடும். காரணம்,

சன்மார்க்க நீதிமானாகிய முஜ்தஹிதுவின் (இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களின்) தீர்ப்பைக் கொண்டு ஷாபிஈ மத்ஹபினர் கையை உயர்த்துகின்றனர். ஒருக்கால் அது தப்பாக இருந்தாலும் மன்னிப்பு உண்டு. ஆனால்,

தக்லீது செய்யாதவர்கள் எந்த முஜ்தஹிதுவின் (இமாமின்) தீப்பைக் கொண்டும் செய்யவில்லை. எனவே ஒருக்கால் அது சரியாகி விட்டாலும் கூட தவறிழைத்தவர்களாவர்.

(உ-ம்) இன்றைய (நீதிமன்ற) நீதிபதிகளின் தீர்ப்பை பெறாமல் ஒருவன் தான் சுயமாக ஓர் வேலை செய்வானாயின் அவன் குற்றவாளியாகின்றான். ஆனால் அதே வேலை ஏதாவதொரு நீதிமன்றத்தின் நீதிபதியின் தீர்ப்பை பெற்றுக் கொண்டு செய்வதினாகில் சுத்தவாளியாகின்றான்.

நீதிபதி வழங்கிய தீர்ப்பு தப்பாகி விட்டாலும் அவ்வேலையை செய்தவன் குற்றவாளியாகமாட்டான் (இப்படி உலக வழக்காறில் இருக்கிறது)

பெருமானார் ஸ்ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கியாஸின் அடிப்படையில் பத்ரு யுத்தக் கைதிகளிடம் பித்யா – பரிவர்த்தனை முதல்களை பெற்றுக் கொண்டு கைதிகளை விடுதலை செய்தார்கள்.

அதன் பிறகு இதற்கு மாற்றாக திருவசனம் இறங்கிற்று. பித்யா வாங்கியதை இறைவன் பொருந்திக் கொள்ளவில்லை என்று தெரியலாயிற்று. எனினும் அம் முதல்களை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. என்றாலும் அவற்றை நன்கு சாப்பிடுங்கள் என கட்டளை வருகின்றது.

'கனீமத் - பித்யா பொருள்களில் நின்றும் சுத்தமான ஹலாலானதாக இருக்கும் நிலையில் சாப்பிடுங்கள்' (8:69) தவறாகிவிட்ட இஜ்திஹாதுகள் குற்றம் பிடிக்கப்படுவதில்லை என்பது இதன் மூலம் தெரிய வருகின்றது.

**முடிவுரை**

**கியாஸ் என்பது பற்றியது**

ஷரீஅத்தின் ஆதாரங்கள் நான்கு 1. குர்ஆன் 2. ஹதீது 3. இஜ்மா஼ - உம்மத்தினர்களது ஏகோபித்த முடிவு 4. கியாஸ் - ஒழுங்குபடுத்தி எடுப்பது.

திருமறையின் கட்டளையும் - பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்திருங்கள், எவன் தனிமையாகிவிடுவானோ அவன் நரகில் வீழ்வான் என்ற திவ்விய நபிமொழியும்;, இஜ்மாவுக்குரிய ஆதாரங்கள் என நாம் விளங்கிருக்கிறோம்.

'கியாஸ்' என்பதற்கு அகராதிப் பொருள்: மதிப்பிடுதல், ஒழுங்குப்படுத்தல் என்பதாகும்.

ஷரீஅத் பரிபாஷையில், பர஼ - உட்பிரிவு மஸ்அலாவை அஸல் மஸ்அலாவுக்கு ஹுக்மின் காரணத்தால் சமமாக்குவது என்பதாகும்.

அதாவது: குர்ஆனிலும் ஹதீதுகளிலும் காண முடியாதொரு மஸ்அலா குர்ஆனிலோ, ஹதீதுகளிலோ வந்துள்ளதா? என்று துருவி ஆராய்ந்து பார்த்து அந்த மஸ்அலாவின் ஹுக்முக்கு காரணம் என்ன? என்று கண்டுபிடித்து அக் காரணம் இதிலும் இருக்கிறதா? இரண்டு காரணங்களும் ஒன்று பட்டிருக்கிறதா? என்று ஆய்ந்து அதில் அக்காரணம் இருப்பதால் இன்ன சட்டம் வந்தது. அது போன்ற காரணம் இதிலும் இருப்பதால் அச்சட்டம் இதிலும் வரும் என்று முடிவு கட்டுவது.

(உ-ம்) 1. மனைவியின் பின் துவாரத்தில் புணருதல் ஆகுமா? என்ற வினாவை ஒருவன் கேட்டால்,

மாதவிடாய் காலத்தில் மனைவியை புணருதல் அசுத்தமாக இருக்கிற காரணத்தால் ஹராமாக்கப்பட்டுள்ளது. அக்காரணம் பின் தூவாரத்தில் புணர்வதிலும் இருப்பதால் இதுவும் ஹராம் என்று நாம் கியாஸ் செய்து அவனுக்கு தீர்ப்பு வழங்குவோம்.

(உ-ம்)2. ஒரு பெண்ணை தந்தை விபச்சாரம் செய்திருந்தால் அப்பெண்ணை மகன் திருமணம் செய்து கொள்வது ஆகுமா? என்று மற்றவன் கேட்டால்,

ஒரு பெண்ணை தந்தை திருமணம் செய்து வாழ்க்கை நடத்தி இருந்தால் அப்பெண் மகனுக்கு ஹராம் அல்லவா? அது போன்று தந்தையால் விபச்சாரம் செய்யப்பட்ட அப்பெண்ணையும் மகன் திருமணம் செய்து கொள்வது ஹராம்.

என்று கியாஸ் படுத்தி தீர்ப்பு வழங்குவோம். (இது ஹனபி மத்ஹபின் படியாகும். ஷாபிஈ மத்ஹபின்படி விபச்சாரத்தால் நஸபு – வமிஷப் பரம்பரை தரிபடாது. எனவே தகப்பன் விபச்சாரம் செய்த அப்பெண்ணை மகன் திருமணம் செய்து கொள்ளலாம்)

இப்படி ஒழுங்குப்படுத்தி எடுப்பதற்கு 'கியாஸ்' என்று கூறுகின்றனர். இப்படி கிளாஸ் செய்வதற்கு அவர் முஜ்தஹிதாக (சகல கலைகளையும் கற்றுணர்ந்த மேதையாக) இருத்தல் அவசியமாகும். அரை குறையானவர்களின் கியாஸுகள் உதவாக் கரைகளாகும்.

கியாஸ் என்பது எதார்த்தத்தில் ஷரீ அத்தின் சட்டத்தை வெளிப்படுத்தி காட்டுவதாகும். அது தனியானதொரு சட்டமில்லை. குர்ஆன், ஹதீதுவின் சட்டமேயாகும். எனினும் கியாஸ் அச்சட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது அவ்வளவுதான்.

கியாஸ் செய்வது ஆகும் என்பது: குர்ஆன் ஹதீதுகள், ஸஹாபாக்களின் நடைமுறைகள் மூலம் ஊர்ஜிதமாகியுள்ளது.

குர்ஆன் கூறுகின்றது. ப ஃதபிறு – யாஉலில் - அப்ஸார் - சிந்தனையாளர்களே! புடிப்பினை பெறுங்கள். (59-2)

அதாவது காபிர்களது கோரமான நிலைகள் மீது உங்களது நிலைகளையும் கியாஸு படுத்திப் பாருங்கள். இவர்கள் போன்ற வாழ்க்கையை நீங்களும் நடத்துவீர்களாயின் உங்களது நிலையும் இந்நிலையில் தானே வந்து முடியும்? என்று படிப்பினை பெறுங்கள்! என்பது அதன் கருத்து.

மேலும் திருக்குர்ஆன் கியாமத் நிலையை நித்திரை மீதும், வரண்டு போன விவசாய பூமி, பின் பசுமையாகுவதின் மீதும் கியாஸ் படுத்தி கூறுகின்றது. ஆரம்ப முதல் கடைசி வரை காபிர்களது நிலைகளை உவமான நயத்தோடு திருக்குர்ஆன் எடுத்தியம்புகின்றது. இதுவும் கியாஸ் தானே.

இமாம் புகாரி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'புகாரி ஷரீப்' எனும் நூல், கிதாபுல் இஃதிஸாமில், 'எச்சட்டத்தை அல்லாஹ் தெளிவாக்கினானோ அந்த அஸல் சட்டத்தைக் கொண்டு அறியப்பட்ட சட்டத்தை ஒப்பாக்கினார். அதைக் கொண்டு கேட்டவர் விளங்கிக் கொள்ள' என்ற பாடத்தை அமைத்து, அதில் ஒரு பெண்மணிக்கு பெருமானார் ஸல்லால்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கியாஸ் - ஒழுங்கு படுத்திக் கூறிய சட்டவிளக்கமான ஒரு ஹதீதையும் இடம் பெறச் செய்துள்ளார்கள்.

ஒரு பெண்மணி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கியாஸ் - ஒழுங்கு படுத்திக்கூறிய சட்டவிளக்கமான ஒரு ஹதீதையும் இடம் பெறச் செய்துள்ளார்கள்.

ஒரு பெண்மணி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சமூகம் வந்து என் தாய் ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார்கள். அவர்களுக்காக நான் ஹஜ் செய்யலாமா? என வினவினாள்.

அதற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆம்! அவர்களுக்காக நீ ஹஜ் செய்! உன் தாய் மீது கடன்கள் இருந்தால் அவற்றை நிறைவேற்றுவதில்லையா? என்றும் விசாரித்தார்கள். அப்பெண் அதற்கு ஆமென்றாள். அல்லாஹுவுக்குரிய கடனை நிறைவேற்றுங்கள். ஏனெனில் கடனை நிறைவேற்றப்படுவதிற்கு அல்லாஹ் மிக உரித்தானவனாக இருக்கிறான்' என நவின்றுள்ளார்கள்.

பெருமானார் அவர்கள், ஹழரத் முஆதிப்னு ஜபல் (ரலியல்லாஹுஅன்ஹு) அவர்களை எமன் நாட்டிற்கு அதிபதியாக நியமித்தனுப்பிய போது 'வழக்குகள் வந்துவிடின் எப்படி தீர்ப்பளிப்பீர்?' என (பரிட்சைக்காக) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள்.

'இறை வேதமாம் திருக்குர்ஆனைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்' என்றார் முஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

இறைவேதத்தில் (தெளிவாக) நீர் பெற்றுக் கொள்ளாவிடின் (என்ன செய்வீர்) என்றார்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இறை தூதரின் வழிமுறையைக் கொண்டு (தீர்ப்பளிப்பேன்)' என்றார் முஆது ரலியல்லாஹு அன்ஹு.

இறை தூதரின் வழி முறையிலும் பெற்றுக் கொள்ளாவிடின் (என்ன செய்வீர்?) என்றார்கள் பெருமானார் அவர்கள்.

என் அறிவாற்றலினால் இஜ்திஹாது செய்வேன் (நேர்மை பெறுவதில்) குறைவு செய்யேன்' என்றார் முஆது (ரலியல்லாஹு அன்ஹு)

'இறைதூதரின் தூதுவருக்கு இறைதூதரின் விருப்பத்திற்கிணங்க நற்பாக்கியமளித்த இறைவனுக்கே சர்வபுகழும் உரித்தாகுக' என பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறி முஆது (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களது நெஞ்சத்தில் தட்டிக் கொடுத்தார்கள் (மிஷ்காத் 324)

கியாஸ் செய்வதை மிக ஆணித்தரமாக இந்த ஹதீது உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் பெருமானாரின் வெளிப்படையான ஜீவியத்தில் 'இஜ்மாவு' என்பதற்கு வாய்ப்பில்லையாதலால் அதுபற்றி முஆது (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை.

இவ்விதமான பெரும் சஹாபாக்கள் ஏராளமான சட்டங்களை தங்களது கியாஸினால் சொல்லியிருக்கிறார்கள்.

(எடுத்துக்காட்டிற்கு அவைகளில் ஒன்று)'மஹர்' நிர்ணயம் இல்லாமல் திருமணம் செய்து சேர்க்கை செய்யாத நிலையில் கணவன் மரணித்துவிட்டால் பெண்ணுக்கு மஹர் (கணவன் புறத்திலிருந்து) கொடுக்க வேண்டுமா? அல்லவா?, என்று இப்னு மஸ்ஊது (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வினவப்பட்ட போது, அவள் போன்ற மற்ற பெண்கள் மஹர் போன்று – 'மஹறு மித்லு' கொடுக்கப்பட வேண்டுமென்று கியாஸ் பிடித்து தீர்ப்பளித்தார்கள் (நஸாபி – பாகம் 2 பக்கம் 88 மிஷ்காத் 277)

(அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும், சஹாபாக்களில் சேர்க்கை செய்யாத காரணத்தினால் அவளுக்கு 'மஹர்' இல்லை என்று கியாஸ் பிடித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.)

இஜ்தனிபூ - பதீரன் - மினல் ழன்னி எண்ணத்தில் நின்றும் அதிகமானவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்' (49-12) என்று திருமறை கூறுகின்றதே என்று இது போழ்து ஙைறு முகல்லிதுக்ள எழுப்பும் ஆட்சேபனைண சரியன்று காரணம்,

(இவ்வசனத்தில் வந்;துள்ள) 'ழன்னு' – எண்ணம் என்பது கொண்டு தீய எண்ணம் என்பதாகும்.

அதாவது முஸ்லிம் பெருமக்கள் மீது தீய எண்ணம் வைக்காதீர்! என்பதாகும். இதனால்தான் இவ்வசனத்தின்; பின் தொடர், ஙீபத் - புற பேசுதல் ((முஃமின்கள் குறைகளை துருவிப் பார்த்தல்) முதலியவற்றை தடுப்பதாக அமைந்திருக்கிறது. இக் கருத்து இல்லையெனில் ஙீபத் - புறம் பேசுவதற்கும், கியாஸுக்கும் (ஒரு இடத்தில் சேர்த்து சொல்ல) என்ன சம்பந்தமிருக்கிறது?

'இன்னமன் - நஜ்வா – மினஷ்ஷைதானி – ஆலோசிப்பதெல்லாம் ஷெய்த்தானில் நின்றுமுளதாகும்' (88-10) என்றிருப்பதால் எல்லா ஆலோசனைகளும் ஷெய்த்தானின் காரியமா என்ன?

இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக செய்யப்படும் ஆலோசனைதான் ஷெய்தானின் ஆலோசனையாகும்.

இது போன்று 'எண்ணம்' என்பது கொண்டு கருத்து தீய எண்ணம்தான். கியாஸின் விளைவு தின்மை என்று (குர்ஆனில்) வந்துள்ளவை அனைத்தும், அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராக செய்யப்படும் கியாஸுகள் என்று கருதப்பட வேண்டும்.

(உ-ம்) (ஆதமுக்கு) 'ஸுஜூது செய்' என்ற கட்டளையை ஷெய்த்தான் பெற்றது (தன்னிலையை ஆதமுடைய நிலையோடு) கியாஸு செய்து பார்த்தான். (அதன் விளைவாக) இறைவனின் கட்டளையை மறுத்தான். (காபிராகி போனான்) இப்படி கியாஸ் செய்வது குப்;ராகும். நாம் கூறிவரும் கியாஸின் அடிப்படை இவ்வாறு இல்லை என்பதை உணர்க.

'இன்னமா – அத்தபிவு – மாயூஹா - இலய்ய – என்னளவில் வஹி அறிவிக்கப்பட்டதேயே நான் பின்பற்றுவேன்' (7-202) என்று குர்ஆன் கூறுகின்றது.

'இன்னமா' என்ற பதம் ஹஸ்று – மடடுப்படுத்துவதற்குரியது. ஆகவே வஹியை தவிர மற்றவர்களான இஜ்மாவுவை, கியாஸை பின்பற்றலாகாது என்றும், குர்ஆன் ஹதீதுகளை மட்டுமே தான் பின்பற்ற வேண்டும் என்று இவ்வசனம் தெரிவிக்கின்றது என்று நைறு முகல்லிதுகள் சொல்கின்றனர்.

இஜ்மாவு, கியளாஸுகளின்படி அமல் செய்வது, குர்ஆன் ஹதீதுகளின்படியே அமல் செய்வதுதான். (வேறில்லை) என்பதையும் 'கியாஸ்' என்பது (குர்ஆன் ஹதீதுகள் உள்ளடக்கியிருக்கும் கருத்துக் கருவூலங்களை) வெளிப்படுத்தக்கூடியது தான் என்பதையும் அவர்கள் சற்று தெரிந்து வைப்பது அவசியமாகும். (இவ்வறிவு அவர்களுக்கு இருந்திருந்தால் இக் கேள்வி வந்தே இருக்காது)

கடைசியாக கியாஸை மறுப்போர்களிடம் ஓர் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எவைகளில் குர்ஆன், ஹதீதுகளின் தெளிவு கிடைக்கப் பெறவில்லையோ அவைகளில், அல்லது வெளிப்படையாக முரண்பாடுகள் நிகழ்ந்திருக்கும் ஹதீதுகளில் என்ன செய்யவீர்கள்?

(உ-ம்) விமானத்தில் செல்லுகையில் தொழுவது எப்படி? ஜும்ஆ தொழுகையின் முதல் ரத்அத்தில் ஜமாஅத்தினர் இருந்தனர், இரண்டாம் ரக்அத்தில் ஓடி விட்டனர். இப்போது ஜும்ஆ தொழுகையாக முடிப்பதா? அல்லது லுஹர் தொழுகையாக நிறைவு செய்வதா? இவ்விதமாக கியாஸி மஸ்அலாக்களில் என்னென்ன? பதில்களை கூறுவீர்கள்.

இதனால் ஏதாவதொரு இமாமின் முந்தாணியை பற்றி பிடித்துக் கொள்வதே மிக சாலச் சிறந்தது. அல்லாஹ் (நம் அனைவருக்கும் மத்ஹபை பின்பற்றி தொடர்ந்து வர) நல்லருள் பாலிப்பானாக ஆமீன்.

*முற்றும்.*